மாலை: 52 ஜூலை 2010 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்துசமய அறநிலையத்துறை வெளியீடு



மயிலை அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன்



சென்னை மயிலாப்பூர் அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயிலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயர்த்தி திருமதி. எழிலரசி, அவர் கணவர் டாக்டர் வி.எம்.ஜோதிமணி குடும்பத்தினர் ரூ. 13லட்சம் மதிப்பீட்டில் நன்கொடையாகக் கட்டித் தந்த அன்னதானக்கூடத்தை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் மனைவி திருமதி. தயாளு அம்மையார், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் 10.6.2010 அன்று குத்துவிளக்கேற்றி திறந்துவைத்தனர்.

விழாவில் மாண்புமிகு முதலமைச்சரின் மகள் திருமதி. செல்வி செல்வம் மற்றும் குடும்பத்தினர், மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. க. முத்துசாமி இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ப.ரா.சம்பத் இ.ஆ.ப., மற்றும் அறநிலையத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

(செய்தி:33)



# திருக்கோயில்
திங்கள் இதழ்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

நிறுவிய ஆண்டு: 1958
திருவள்ளுவர் ஆண்டு: 2041
ஆனி – ஆடி
ஜூலை 2010
மலர்:52. இதழ்:7.

சிறப்பாசிரியர் (ம)
வெளியிடுவோர்
**திரு.ப.ரா. சம்பத்,** இ.ஆ.ப.,
ஆணையர்,
இந்து சமய அறநிலையத் துறை,
நுங்கம்பாக்கம்.சென்னை-600 034.

ஆசிரியர்
**தென்னம்பட்டு ஏகாம்பரம்,** எம்.ஏ.,

ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத் துறை
119. உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம்,சென்னை-600 034.
தொலைபேசி எண்:
28334811/12/13
மின்அஞ்சல்
tn.endowments@gmail.com


## சிறப்பாசிரியர் பக்கம்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் படைத்த சங்கத் தமிழில் – "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" எனும் கணியன் பூங்குன்றனார் பாடலுக்கு கவிதை வடிவில் யாத்த எழுத்தோவியம், சான்றோர் சிந்தனையில் டாக்டர் மு.வ. அவர்களின் வழிபாடு, நம்மிடையே வாழும் மூத்த தமிழறிஞர் முனைவர் வை.இரத்தின சபாபதி அவர்களின் திருமுறை காட்டும் வாழ்வியல் என அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் இவ்விதழை அணிசெய்கின்றன. இவை படிப்போரைச் சிந்திக்க வைத்து மனதைச் செம்மைபடுத்துவன. பன்னிரு திருமுறை ஒலி பெயர்ப்பு நூல் வெளியீட்டு விழாவில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை தொகுத்து இவ்விதழில் வாசகர் பார்வைக்கு வெளியிடப் பெற்றுள்ளது.

கடந்த மாதத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குடும்பத்தினர் மயிலாப்பூர், அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயிலுக்கு ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் அன்னதான கூடம் ஒன்று நன்கொடையாகக் கட்டித் தந்துள்ளனர். மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள், திருவந்திபுரம் அருள்மிகு தேவநாத சுவாமி திருக்கோயிலின் திருப்பணிக்கு ரூ. 1 கோடி நன்கொடை வழங்கியுள்ளார்கள். பெங்களூரு தொழிலதிபர் திரு. எம்.பூபாலன் எனும் ஓர் அன்பர், சோளிங்கர், அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் திருப்பணிக்கு ரூ.8.07 கோடி நன்கொடை அளித்துள்ளார்கள். அவர்களுக்கெல்லாம் இத்துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், அவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும், செல்வமும், எல்லா நலன்களும் பெற்று நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவனைப் போற்றி இறைஞ்சுகிறோம்.

ப.ரா.சம்பத்



(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்

## இதழின் உள்ளே...


- சங்கத்தமிழ் – யாதும் ஊரே, யாவரும் கேளிர் –முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் –2
- பிரார்த்தனை – திருப்போரூர் சந்நிதிமுறை –5
- சான்றோர் சிந்தனை – வழிபாடு – டாக்டர் மு.வரதராசனார் –7
- பன்னிரு திருமுறை ஒலி பெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா – மாண்புமிகு அமைச்சர் சிறப்புரை –12
- திருமுறை காட்டும் வாழ்வியல் – 'இளைத்தேன்' –பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி 17
- நீதிக்கதை – அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது? –தென்கச்சி கோ. சுவாமிநாதன் 21
- முதலாசார்யர் ஸ்ரீமந் நாத முனிகள் – ஸ்வாமி –23.
- திருத்தணி வீரட்டானேசுவரர் –பனையபுரம் அதியமான் –26.
- சர்வக்ஞர் போற்றும் சிவனார் அமுது –முனைவர் வேலூர் ம.நாராயணன் –29.
- விழா நிகழ்ச்சிகளின் தொகுப்பு –33.
- உடல், மனம், ஆன்மா, –தென்னம்பட்டு ஏகாம்பரம் –38

# சங்கத்தமிழ்

# யாதும் ஊரே; யாவரும் கேளிர்!

## முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்



மூன்று கூறாக ஆவதற்கு முன்பிருந்த
முகவைப் பெரு மாவட்டத்தில் மூதறிஞர் பண்டிதமணி
கதிரேசன் செட்டியார் பிறந்தார் எனக் கேள்வியுற்றுக்
களிப்புடனே மகிபாலன்பட்டிக்குச் சென்றிருந்தபோது
பூங்குன்றமெனப் பழையநாள் இலக்கியமாம்
புறநானூற்றுக் குறிப்பில் இருந்த ஊரின் பெயர்தான்
மகிபாலன்பட்டியாக
மாறிற்றென்று, பெரும்புலவர்
மாணிக்கனார் உரைக்கக் கேட்டு
மகிழ்ச்சியிலே திளைத்துப் போனேன்.

கணியன் பூங்குன்றனார் எனும் அவ்வூர்க் கவிஞன்
கற்குகையொன்றில் செதுக்கியுள்ள கவிதையினைக்
காண வாரீர் என அழைத்திடவே; சென்று கண்டேன்! – அந்தப்
பழம்புலவன் கரங்கொண்டு செதுக்கியதோ – அன்றி
பார்புகழும் அப்பாட்டைப் பின்வந்தோர் செதுக்கியதோ?
யார் செயலாய் இருந்திடினும் அப்பாட்டில்
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும்
அறைகூவல்தனை அற்றைநாளில் ஒரு தமிழன்
நிறைகுடமாய்த் திகழும் தன் நெஞ்சத்தைத் திறந்துகாட்டி
விரிகடல்சூழ் உலக முழுதும் நம் ஊரே என்றும்
விழியும் ஒளியும் போல் மக்கள் எலாம் நம் உறவே என்றும் – புதிய
வெளிச்சத்தால் பொல்லாத இருள் கிழித்து
வேற்றுமையின் வேரறுத்துப் புரட்சி செய்தான்!

பூந்தமிழில் வண்டாகப் புணர்ந்து கலந்து – இந்தப்
பூமிக்கே பொதுக்கவிதைக் கனியொன்றைத் தந்த கவிஞன்
பூங்குன்றந்தனில் பிறந்த புலவன் கணியன்தான் என்கின்றபோது
புல்லரித்துப் பூரித்துப் போகுதம்மா; நம் எண்சாண் உடம்பு!


அந்நாளில் புலவரெல்லாம் அகிலத்தை ஆளுகின்ற
அரசர்களின் அவைக்களத்தில் அரிய தமிழ்க் கவிகள்பாடி
ஆனையென்றும் சேனையென்றும் ஆயிரம் பொற்கிழிகள் என்றும்
மானியங்கள் மற்றும் பல பரிசில் என்றும் மலைமலையாய்ப் பெற்றிடுவர்!

இந்நாளில் சில புலவர்போல் வாழ்வார்க்கு வாழ்த்துரைத்து
இன்னலுற்று அவர் தாழ்வாராயின் அக்கணமே சிறகடித்து
அற்றகுளத்துப் பறவைபோல அடுத்தகுளம் பார்க்கின்ற
இயல்புடையார் அப்போதும் சிலர் இருந்திடத்தான் செய்தார்கள்!
கணியூர்ப் பூங்குன்றனோ; அவர்கண்டு கவலைமிகக் கொண்டதனால்

அணிமணிகள் தமிழில் செய்து அரசர்க்கும் வள்ளல்கட்கும்
பூட்டி மகிழ்வதிலே ஆர்வமொரு கடுகளவும் காட்டாமல் இருந்திடவே;
நீட்டி முழக்கிச் சிலபேர்; "அரசை அணுகிப் பரிசு பெறப்
பாடல்களை இயற்றிடுக!" எனக் கேட்டபோது –கணியன்;
பக்குவமாய் விடையளித்து அவர் விருப்பமதைத் தட்டிக் கழித்தான்!

"நாடு பற்றிப் பாடுகின்றீர் – நன்று! நன்று!
நாடாளும் மன்னர் பற்றிப் பாடுகின்றீர் – அதுவும் நன்று!
நாடுதனை மீட்பதற்கும் புதிதாகப் பறிப்பதற்கும்
கேடுகளைச் சுமந்து விழுப்புண்கள் ஏந்துகின்ற
பீடுநடை வீரர் பற்றிப் பாடுகின்றீர் – மிகவும் நன்று!
ஏடுகொள்ளா இலக்கியங்கள் காதலையும் களப்புகுவோர் காதையையும்
எடுத்தியம்பும் காரணத்தால் என்வழியைத் தனிவழியாய் ஆக்கிக்கொண்டு
எல்லா ஊரும் எமது ஊரே
எல்லா மனிதரும் எமது உறவே – என
எழுதத் தொடங்குகின்றேன்" என்றான்'!

நற்றிணையில் வருகின்ற காதல் பாட்டொன்றைக் கூடக்
கற்றறிவாளன் கணியன் பூங்குன்றன் எழுதுங்கால்
"மருந்துக்கு உதவுகின்ற மரத்தின் பட்டைகளை மட்டுமின்றி – அந்த
மரத்தையே வேரோடு பிடுங்குவதோ?" எனக் கேட்டு,
பயன்படுவன எதனையும் பாதுகாக்க வேண்டுமெனப்
பாங்காக அறிவுரையைப் பகருகின்றான் உலகிற்கு!
"ஒரே உலகம்" எனும் கொள்கைதனை – மனிதரெல்லாம்
"ஒரே குலம்" எனும் தத்துவத்தைப் புவியில்;
கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு
முன் தோன்றிய மூத்த குடிப் பிறந்த தமிழ்க்
கணியன் பூங்குன்றன், கவிதை நடைச்
சொல்லூன்றி நிலைநாட்டுகின்றான்!




விதிப்பயனே எல்லாம் என்றுரைத்துச் சோர்ந்து
கதியற்றுக் கன்னத்தில் கைவைப்போர்தனைப் பார்த்து;
"நன்மைக்கும் தீமைக்கும் காரணங்கள்
நமது செயல்களேயன்றி பிறரல்ல" என்று
நயம்பட உரைக்கின்றான் அந்த நற்றமிழ்ப் புலவன்!
அம்மட்டோ?

வேதனைகள் விரைந்து தொடர்வதும் – அவை
விலகித் தொலைந்து போவதும் கூட
நாம் ஏற்றிடும் செயல்களால் என்றே
நன்கு கணித்து நவில்கின்றான் கணியன்!
"பிறந்த உயிர்கள் இந்த மண்ணில்
இறந்து மறைதல் புதிதுமல்ல;
இன்பமொன்றுக்காகவே வாழ்க்கை என்பதும்
துன்பம் வந்திடின் வாழ்வை வெறுப்பதும்
உறுதி கொண்ட மாந்தர்தம்
உளத்திற்கேற்ற உயரிய செயலுமல்ல!

ஆற்றொடு போகும் தெப்பம் போல்
ஆடியும் அசைந்தும் அமைதி கண்டும்
ஆருயிர்ப் பயணம் அவனியில் நடக்கும்! எனவே
ஆன்றோர் காட்டிய அரிய வினைகளைத் தொடர்க!
செழிப்பில் திளைத்தோர்க்கு சிரம் தாழ்த்தலுமில்லை;
சிறியோர் எனப்படுவோரை இகழ்ந்துரைத்தலுமில்லை!"

இவ்வாறு;
உலக ஒற்றுமை, ஒரு குலக் கொள்கை,
உயிரின் தன்மை, உயரிய வினைகள் – வாழ்வில்
உற்ற துன்பமும் உவகையின்பமும் ஒன்றெனக் கருதுதல்,
உயர்ந்துள்ள செல்வர்க்குப் பணியாமை – வீணில்
உழன்றிடும் சிறியோரை இகழாமை; எனப் பல
வண்ணமிகு மலர்கள் கொண்டு – உயர்
எண்ணங்களைத் தொடுத்தளிக்கும் பெரும்
உள்ளம் காணுகின்றோம் இந்தக் கவிதையினில்; புது
வெள்ளம் போல் இக்கருத்து பரவட்டும் காசினியில்!



ஆனால் ஒன்று;
ஊரெல்லாம் இணைந்து ஒருலகாய் ஆவதென்பதும்
உறவுகொண்டே மனித குலம் ஒன்றே எனத் திகழ்வதும்
உயரிய குறிக்கோளாம் என்றுரைத்த புலவன் கூட
தனது ஊரை மறவாமல் பூங்குன்றமென இணைத்தே
கணியன் பூங்குன்றன் எனும்
கவிஞனாய் உலவியதைக் கவனமுடன்
எண்ணிப் பார்த்தால் – அந்த மாமனிதனையும்
மண்ணின் பற்று விடவில்லை என்பதுதான் உண்மையன்றோ?

❋

***"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னாது என்றலும் இலமே; 'மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆறாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம்' என்பது திறவோர்
சாட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."***

**(புறநானூறு – பாடல்: 192
பாடியவர்: கணியன் பூங்குன்றன்)**

❋

**பொருள் விளக்கம்:**
கேளிர் = உறவினர். புதுவதன்று = புதிதல்ல.
முனிவின் = வெறுப்பின் காரணமாக.
புணை = தெப்பம். திறவோர் = ஆன்றோர்.
இலம் = இல்லாமை. (இல்லையென்ற பொருளில் இங்கு வரும்)

**– மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞரின் சங்கத்தமிழ் நூலிலிருந்து**



# திருப்போரூர் அருள்மிகு கந்தசுவாமி

# திருப்போரூர்ச் சந்நிதிமுறை மாலை


(திருப்போரூர் ஆதீன ஆதிகுருமூர்த்தியான ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள், அருள்மிகு கந்தசாமிப் பெருமானுக்கு சிறப்பான கற்கோயில் அமைத்து, அற்புதமான தோத்திர நூலாக 'திருப்போரூர் சந்நிதி முறை' எனும் சொற்கோயிலையும் படைத்தார். அதில் 102 மலர்களால் தொடுக்கப்பெற்ற 'மாலை' எனும் பாமாலையிலிருந்து சில பாமலர்களை இங்கு சமர்ப்பிக்கிறோம்)

நாயேனுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயேன் இழைத்த பெரும்பிழையை– நீயே
பொறுத்தாள்வ துன்கடனாம் போரூரா என்னை
ஒறுத்தால் எனக்கார் உறவு.

இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன்– சொல்லறத்தின்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன்.

இடர்களையும் இன்பக் கரும்பை எமது
தொடர்பிறவி நீக்குந் துணையைத்– தொடர்பாகி
உள்ளும் புறம்பும் ஒளிவீசும் போரூரில்
தெள்ளு மணியைநெஞ்சே சேர்.

கண்ணிற் கருமணியே கற்பகமே கற்றோர்கள்
உள்நிற்கும் ஓரொளியே ஓர்பொருளே –எண்நிற்கும்
போரூர் இறையே புனிதநிறை ஆனந்தச்
சீருரில் நாயேனைச் சேர்.



ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே – நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற ஆறுநீ பேசு.

நோயுற்(று) அடராமல் நொந்துமனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன் – காயத்தை
ஓர்நொடிக்குள் நீக்கினனை ஒண்போரூர் ஐயாநின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து.


சான்றோர் சிந்தனை

# வழிபாடு

பொருள்களின் இயல்புகளை ஆய்ந்து அறியக் கற்றுக் கொண்டோம். அறிவியல் துறை (விஞ்ஞானம்) இவ்வகையில் எவ்வளவோ வளர்ந்து விட்டது. பௌதிகம், இரசாயனம், உயிரியல், கணக்கு, வானநூல் முதலியவற்றில் வளர்ந்துள்ள வளர்ச்சி பெரிது. அவற்றின் துணையால் அறிஞர்கள் அறிவுத் துறையில் ஊடுருவிச் சென்று பல அரிய கருவிகளைக் கண்டுபிடிக்க முடிந்தது.

அவற்றைக் கொண்டு விண்ணில் பறக்கவும், கடலினுள் இறங்கவும் முடிகிறது. உயிரினங்களையும், மனித இனத்தையும் எளிதில் அழிக்க வல்ல பொருட்களைப் படைக்க முடிகிறது. பல நாள்கள் பலர் உழைத்துச் செய்யக் கூடிய தொழில்களை ஒரு சிலர் சிறிது நேரத்தில் செய்து முடிக்கவல்ல இயந்திரங்களைப் படைக்க முடிகிறது. சந்திர மண்டலமும் சென்று வர முடிகிறது. ஆனால், வாழ்வின் அடிப்படை உண்மைகளைத் தெளிவாக உணர முடியவில்லை.

பல பொருள்களைப் பற்றியும் அவற்றின் தோற்றம், இயக்கம், முடிவுகளைப் பற்றியும் ஆராயும்போது எப்படி என்ற வினாவுக்கு ஆங்காங்கே விடை காண ஆராய்ச்சி உதவுகிறது. ஏன் என்ற வினாவுக்குப் பல இடங்களில் விடை காண முடியவில்லை.



சூரியனும் மற்ற விண்மீன்களும் அமைந்துள்ள அமைப்பையும், சந்திரனும் மற்றக் கோள்களும் ஒழுங்காக இயங்கும் இயக்கத்தையும் அறிய முடிகிறது. ஏன் அவ்வாறு இயங்குகின்றன என்பதற்குக் காரணம் காண முடியவில்லை.

செடி, கொடிகளின் வளர்ச் சிக்கும், உயிரினங்களின் பிறப்பு, வளர்ப்புக்கும் விளக்கம் காண முடிகிறது. மனித உடம்பைப் பற்றியும் அவ்வாறே ஆராய்ந்து அறிய முடிகிறது. ஆனால், ஏன் என்ற வினாவிற்கு விடை காண இயலாமல் பல இடங்களில் தட்டுப்பட்டு நிற்க வேண்டியுள்ளது. வானொலி, தொலைக்காட்சி, கம்ப்யூட்டர் முதலிய அரிய கருவிகளைப் படைத்துள்ள மனித மூளைக்கும் எட்டாதன பல உள்ளன.

சான்றோர் பலர் அவற்றை எல்லாம் ஆராய்வதை விட்டு வாழ்க்கையின் அடிப்படையை உணர முயன்றனர். ஏன் பிறந்தோம்? ஏன் வாழ வேண்டும்? முடிவு என்ன? அப்பால் உள்ளது என்ன? என்பவற்றை ஆராய்த் தலைப்பட்டனர்.

பலர் தம் உணர்வுக்கு எட்டியவற்றைக் கதைகளின் வாயிலாகக் கற்பனைச் சுவையூட்டி எழுதினார்கள். சிலர் தாம் உணர்ந்தவற்றை அறிவின் துணை கொண்டு தெளிவுபடுத்த முயன்று தத்துவக் கருத்துக்களாகத் தந்துள்ளனர். அந்தக் கருத்துக்களை முழுவதும் நம்பி ஏற்றுக் கொள்ள இயலா விட்டாலும், அவற்றின் அடிப் படையாக உள்ள உண்மைகள் ஏற்றுக் கொள்ளத் தக்கனவாக உள்ளன.

தத்துவ ஞானிகள் சிலர் பக்திப் பாடல்கள் பாடி, அவற்றின் வாயிலாகத் தம் அனுபவங்களை உணர்த்தியிருக்

– டாக்டர் மு.வரதராசனார் –

கிறார்கள். அவை உள்ளத்தால் உணரத் தக்கனவாக உள்ளன.

அவற்றின் பிழிவாக உள்ள உண்மை, பரம்பொருள் ஒன்று உண்டு என்பதும், அது சிந்தையும், சொல்லும் கடந்த ஒன்றாக உள்ளது என்பதும், அந்தக் கடவுளின் நெறியில் அன்பும், உண்மையும் ஒளிர்கின்றன என்பதும் வாழ்க்கையை அந்த நெறியில் அமைத்து நடத்தினால் எளிதாக அமையும் என்பது ஆகும்.

அவ்வாறு கடவுள் நெறியைப் போற்றி வாழ்வதை மட்டுமே ஒரே கடமையாகக் கொண்டு மற்றவற்றை விடுமாறு சான்றோர் சிலர் வற்புறுத்தித் துறவறத்தைப் போற்றினார்கள். கடவுள் நெறியைப் போற்றி மனைவி மக்களுடன் அன்பாக வாழ்தலே போதும் என்று சிலர் இல்லறத்தைப் போற்றினார்கள்.

எவ்வாறு ஆயினும், வாழ்க்கையின் முதலும் முடிவும் கடவுளைச் சார்ந்தவை என்று தெளிந்து அந்த வழியில் சிந்தனையைச் செலுத்துதலே வழிபாடு ஆகும்.

சிலர் கடவுளுக்கு உருவம் படைத்து வழிபடுகிறார்கள். சிலர் உருவ வழிபாட்டை எதிர்க்கிறார்கள். பெரும்பாலோர் கோயில் அல்லது பெரிய கட்டடம் ஒன்றை அமைத்து வழிபாடுகள் செய்கிறார்கள். உருவ வழிபாடா? அருவ வழிபாடா? எது சிறந்தது? என்று போராட வேண்டிய தேவை இல்லை. அவரவர்கள் மன ஒருமைப்பாட்டுக்கு எது உதவி புரிகிறது என்று நம்புகிறார்களோ அதைப் போற்றலாம். அதற்காகப் போராடி பிளவுற்று நிற்கத் தேவையில்லை. உள்ளத்தில் கடவுள் நெறி பதிவது ஒன்று தான் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

மக்களிடையே வேறுபாடு உண்டாக்குவது, மக்களைப் பிரித்துப் பூசல் விளக்கைத் தூண்டுவது எதுவாக இருந்தாலும், அதற்கும் கடவுள் நெறிக்கும் தொடர்பு இல்லை என்று ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு சமயத்திற்கும் தனித் தனியே ஒரு கடவுள் இல்லை என்ற தெளிவு வேண்டும். ஒரு பரம்பொருள் உண்டே தவிர வெவ்வேறு தெய்வங்கள் இல்லை என்ற தெளிவு வேண்டும்.

இரண்டு, மூன்று, ஏழு, எட்டு என்ற அளவில் தெய்வங்கள் பல இல்லை என்றும், வெவ்வேறு வடிவங்கள் கூறப்படும் நிலையிலும் அவை எல்லாம் ஒரே பரம்பொருளுக்குக் கூறப்பட்ட பல வடிவங்களே என்றும் உணர வேண்டும்.

நாம் எந்தக் கடவுளை வழிபடுகிறோமோ, அந்தக் கடவுளே மற்றச் சமயத்தாரையும் படைத்துக் காத்து வருபவர் என்ற உண்மையைத் தெளிய வேண்டும். இந்தக் கோயிலில் எந்தப் பரம்பொருள் இருப்பதாக நம்புகிறோமோ அந்தப் பரம்பொருளே மற்றத் தெய்வ நிலைக் கட்டடங்களிலும் இருப்பதாக உணர வேண்டும். இந்தத் தெளிவு இல்லையானால், ஆத்திகம் என்று கூறப்படும் கடவுள் நெறியில் முதல்படியையும் அடையவில்லை என்று கருத வேண்டும்.

ஒரே கடவுள் உண்டு என்றும், அவரே எல்லாச் சமயங்களிலும் போற்றப்படுபவர் என்றும், அவரே உலகங்களில் உள்ள எல்லா உயிர்களிலும் உயிராய் இருந்து இயக்குபவர் என்றும் தெளிவு பெறுவதே கடவுள் நெறியின் முதல்படியாகும்.

இந்தத் தெளிவு இல்லாமல் சமயங்களின் பெயரால், சடங்குகளின் பெயரால் போராடுவோர் கடவுள் நெறிக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் கடவுள் இல்லை என்னும் நாத்திகரை விட எந்த வகையிலும் சிறந்தவர் அல்லர்.

சமயங்களின் பெயரால் கோயில்களிலும், வீடுகளிலும் நடத்தப்படும் சடங்குகள் எல்லாம் சடங்குகளே என்று உணர வேண்டும். கடவுள் நெறிக்குப் பயன்படும் என்று முன்னோர் களால் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டவை அந்தச் சடங்குகள். சடங்குகளே முதன்மையானவை என்று நம்பி விடக்கூடாது. சடங்குகளைச் செய்வதே போதும் என்று எண்ணிவிடல் ஆகாது. மன ஒருமைப் பாட்டுக்கும் பண்பாட்டுக்கும் உதவும் என்று முன்னோர் சிலர் ஒவ்வொரு குழுவார்க்கும் சடங்குகள் சிலவற்றை ஏற்படுத்தித் தந்தார்கள்.

சான்றோர் சிந்தனை

அந்தச் சடங்குகள் எல்லார்க்கும் தேவை என்றோ, எல்லாக் காலத்திற்கும் தேவை என்றோ வற்புறுத்தக் கூடாது. அவ்வாறு வற்புறுத்துவதால் நாத்திகம் (கடவுள் மறுப்பு) பெருகுமே தவிர வேறு பயன் விளையாது. சமயங்களில் நல்ல உண்மைகள் இருந்தபோதிலும் பொய்ம்மை பெருகியதற்கு அத்தகைய வற்புறுத்தலே காரணம் ஆகும். கடவுள் நெறிக்கு உதவும் வழிவகைகள் என்று ஏற்படுத்தப்பட்டவைகளே தவிர அவைகளே கடவுள் நெறி அல்ல. சமயங்களில் வழிவழியாக வந்த வேடங்களும் அப்படிப்பட்டவைகளே. அவற்றை விரும்புவோர் கொள்ளலாம்; விரும்பாதவர் விடலாம். வற்புறுத்தல் கூடாது. அவரவர் மனம் வளர்ந்த வளர்ச்சிக்கு ஏற்றவாறு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; அல்லது, அப்பால் செல்லலாம். அவைகளுக்கு முதன்மை கொடுப்பதால், மக்களிடையே பிளவும் பூசலும் வளர்ந்து சமுதாயம் தேங்கி நிற்பதை வரலாறு உணர்த்துகிறது. ஆகையால், கடவுள் நெறிக்குத் தவிர வேறு எதற்கும் முதன்மை தரல் ஆகாது.

பணத்தைத் தருவதாலோ, பணத்தைச் செலவு செய்து சில சடங்குகள் செய்வதாலோ, சில பொருட்களைத் தருவதாலோ, கடவுளின் அருளைப் பெற முடியும் என்று நம்பிக்கை மூடநம்பிக்கை ஆகும். பொருள் செலவு செய்து விடுவதால் கடவுளை மகிழ்விக்க முடியாது. கடவுள் இவற்றை எதிர்பார்த்து உட்கார்ந்திருப்பதாக எண்ணுவது தவறு.

கோயில்களும், அந்தக் கட்டடங்களின் பெருமைகளும் உயர வேண்டும் என்ற ஆர்வத்தால் பொருள் செலவு செய்வது ஒருவாறு பொருந்தும். ஆனால், கடவுளின் அருளை இவ்வாறு பொருள் செலவிட்டு விலைக்கு வாங்கிட முடியும் என்ற மூடநம்பிக்கை கொண்டு செய்வது பொருந்தாது. கடவுள் நாம் கொடுக்கும் கைப்பொருளை (லஞ்சத்தை) வாங்கிக் கொண்டு அதற்குக் கைமாறாக நமக்கு உதவுவார் என்று எண்ணுவது அறியாமை. வழக்கில் வெற்றி பெற, வியாபாரத்தில் மிக்க ஊதியம் பெற, தொழிலில் உயர்வு பெற என்று இவ்வாறெல்லாம் நாம் விரும்பும் உதவியைச் செய்வதற்காக நாம் தரும் பொருளை ஏற்றுக் கொள்வார் என்று நம்புவது, கடவுளைப் பற்றிய தவறான கொள்கையாகும்.

அவ்வாறு பிரார்த்தனைகள் – பொருள் தரும் வேண்டுதல்கள் –செய்வோர் சில வேளைகளில் வெற்றி பெறுதல் உண்டு. அந்த வெற்றிகள் இயல்பாக ஏற்படுகின்றன. அவை செலவான பொருளுக்குக் கைம்மாறாகக் கடவுள் தந்தவை என்று தவறாக எண்ணக் கூடாது. கடவுள் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்கள் வகுத்துப் பொதுமையான ஆட்சி புரியும் ஒரு பெருஞ்சக்தி என்று உணர வேண்டும்.

**நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்**
**நினையாதுஒருபோதும் இருந்தறியேன்**

என்று திருநாவுக்கரசரும்,

**நெஞ்சகமே கோயில்**
**நினைவே சுகந்தம் அன்பே**
**மஞ்சனநீர் பூசைகொள்ள**
**வாராய் பராபரமே**

என்று தாயுமானவரும்,

**அன்பெனும் பிடியுள்**
**அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே**

என்று இராமலிங்க வள்ளலாரும் பாடிய பாடல்களை உணர்ந்து அன்பை வளர்த்து வழிபட வேண்டும்.

வாழ்வு ஏன் என்று ஆராயும் முன், நான் யார் என்று தெளிய வேண்டும். சில ஆண்டுகளுக்குப் பிறகு அழியும் இந்த உடம்பு நான் அல்ல, உடம்பின் புலன்களின் வழி இயங்கும் மனம் நான் அல்ல. உடம்பின் புலன்களின் வழி இயங்கும் மனம் நான் அல்ல. இவற்றின் உள்ளே விளங்கும் உயிரே (ஆன்மா) நான் என்று உணர வேண்டும்.

உடம்பு உயிருக்கு ஒரு சட்டை, மனமும் ஒரு சட்டை. இந்தப் புறச்சட்டை அகச்சட்டைகளைக் கொண்டு உள்ளே விளங்கும் உயிர் அழிவில்லாதது என்று தெளிய வேண்டும்.

சான்றோர் சிந்தனை

உடம்பை நான் என்றும், உடம்பைச் சார்ந்த பொருள்களை என்னுடையவை என்றும் தவறாகக் கருதுதல் 'செருக்கு' என்று திருவள்ளுவரால் கடியப்பட்டது.

**யான்எனது என்னும்**

**செருக்கறுப்பான் வானோர்க்கு**

**உயர்ந்த உலகம் புகும்.**

என்று அவர் கூறும் கருத்து, கடவுள் நெறிக்கு உரியதாகும்.

எந்தக் கருவியையும் பயன்படுத் துவதற்காகவே காப்பாற்றுகிறோம். அந்தக் கருவிக்குத் தலைமை தந்து நாம் அடிமை ஆவதில்லை. உடம்பும், ஒரு கருவியே. மனமும் ஒரு கருவியே.

உடம்பு நோய் இல்லாமல் இருப்பதற்கு ஏற்ற வகையில் நல்ல உணவு தந்து அதைக் காப்பாற்ற வேண்டும். சுவைக்காக விரும்பி உண்டு அதைக் கெடுத்து விடக் கூடாது. உடம்பு நலமாக விளங்கும் வகையில் அளவு அறிந்து தக்க உணவு தர வேண்டும். உடம்பின் போக்கில் சோம்பலாக இருப்பதும் கூடாது. இன்பத்திற்காக அலையும் போக்கில் அதைக் கடிவாளம் இல்லாமல் விட்டு விடவும் கூடாது. அவ்வாறே மனம் என்னும் கருவியையும் அதன் போக்கில் அலையவிடக் கூடாது. அது நம்மை அடிமையாக்கித் தன் போக்கில் நம்மை ஆட்டி வைக்க விடக்கூடாது.

**சென்ற இடத்தால் செலவிடாது, தீதுஒரீஇ, நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

நன்மை தீமை நமக்குத் தெரியும். நாம் அறிவு கொண்டு தெளிந்த வழியில் – நம் கட்டளைப்படி –மனம் இயங்க வேண்டும்; உடல் உழைக்க வேண்டும். மனத்திற்கும் உடலுக்கும் தலைமை தாங்குவது உயிர் (ஆன்மா). ஆகவே, அவற்றிற்குத் தலைமை தாங்கி வாழ்வை நடத்த வேண்டும்.

இந்தத் தெளிவு பெற்றவர்கள், பிறப்பால் உயர்வு தாழ்வு கருத மாட்டார்கள். பதவியால் வரும் பெருமை, சிறுமைகளையும் பொருட்படுத்த மாட்டார்கள். புகழை நாடி அலையவும் மாட்டார்கள். இவை எல்லாம் உடம்பு மனம் ஆகிய கருவிகளை ஒட்டியவைகளே. உயிர் என்னும் ஆன்மாவுக்கு இவை இல்லை. ஆன்ம நிலையில் ஒருமைப்பாடு ஒன்றே அவர்களின் நெஞ்சில் நிற்கும். உயிர்கள் எல்லாம் கடவுளின் கோயில்களாகவே அவர்களுக்கு ஒப்புரவுக் காட்சி அளிக்கும்.

குழந்தைப் பருவம் முதல் எத்தனையோ தொடர்புகள் ஏற்பட்டு வந்தன. தாய், தந்தை, உடன்பிறந்தோர், சுற்றத்தார், நண்பர் முதலான பலரின் தொடர்பு பெற்று வளர்ந்தோம். அவர்கள் எல்லோரும் நாளடைவில் மறைகின்றனர். மறையாமல் இருப்பவர்களின் உள்ளத்தின் அன்பும் மெல்ல மெல்ல மாறுகின்றது. புதிய தொடர்புகள் ஏற்படுகின்றன.

அவைகளும் மறைகின்றன, மாறுகின்றன. பொருள்களின் தொடர்புகளும், அப்படிப்பட்டவைகளே. நம் உடம்பின் தன்மையும் அப்படிப்பட்டதே; படிப்படியே மாறுகின்றது. முடிவில் மறைகின்றது.

அதனால்தான் முன்னோர் நிலையாமை பற்றி அறிவுறுத்தினார்கள். ஆனால், அதைக் கொண்டு வாழ்க்கையை வெறுத்தல் ஆகாது. நிலையாமை உள்ள தொடர்புகளுக்கு இடையே நிலைபேறாக உள்ள ஒரு பெரும் தொடர்பை உணர வேண்டும். தாய், தந்தை, சுற்றம், நட்பு, பொருள் இவை எல்லாவற்றையும் படைத்து இயக்கி வரும் பரம்பொருளை நினைந்து போற்ற வேண்டும். அவைகளின் இயல்பைத் தெளிந்து காண வேண்டும். அவற்றின் தொடர்புகள் வாயிலாக அந்தப் பரம்பொருளின் தொடர்பை – நிலையான ஒரு பெருந்தொடர்பை – உணர்ந்து மகிழ வேண்டும்.

அந்தப் பெருந்தொடர்பை உணர்ந்து விட்டால் பிறப்பும், இறப்பும் இயல்பாகத் தோன்றும். நிலையாத தொடர்புகளால் வரும்

இன்பமும், துன்பமும் இயல்பாகத் தோன்றும். உண்மையும், அன்பும் பல உயிர்களின் வாழ்வில் தொடர்ந்து இருந்து வருதல் விளங்கும்.

ஓர் ஆற்றின் போக்கில் நுரைகளும் அலைகளுமாக, எழுச்சியும் வீழ்ச்சியுமாக, சுழற்சியும் ஓட்டமுமாக, கலங்கலும் தெளிவுமாக எவ்வளவோ மாறுதல்களைக் கண்டபோதிலும், நீரும் தண்மையும் மட்டும் என்றும் எங்கும் தொடர்ந்து இருந்துவரல் உணர்கிறோம்.

அதுபோலவே, வெவ்வேறு உடல்களும், அவற்றின் இறப்பும் பிறப்பும், இன்பமும் துன்பமுமாக எவ்வளவோ வந்தபோதிலும் அவற்றினூடே உண்மையும் அன்பும் என்றும் எங்கும் நிலையாக விளங்கி வர காண்கிறோம்.

இவ்வாறு உண்மை தெளிந்த சான்றோர்களின் வழியில் கடவுளின் ஆட்சி முறையை உணர்வதே மெய்யுணர்வாகும்.

மெய்யுணர்வு பற்றி எழுந்த நூல்கள் பல. அவை ஒன்றை ஒன்று மறுப்பதற்காக, எவ்வளவோ கற்பனைச் சிக்கல்களை எழுப்பி நுட்பமான வாதங்கள் நிகழ்த்துகின்றன. அவற்றை எல்லாம் கடந்து, கடவுளின் ஆட்சி முறையை வாழ்க்கையைக் கொண்டு உள்ளத்தால் உணரும் மெய்யுணர்வே சிறந்தது.

அந்த மெய்யுணர்வு வாய்ந்தவர்கள், உலகம் முழுவதும் கடவுளின் குடும்பம் என்று உணர்வார்கள். உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் அந்தக் கடவுளின் குடும்பத்தினர் என்றும், கடவுளே குடும்பத்தின் தாய், தந்தை என்றும் உணர்வார்கள்.

அந்த உணர்வு தழைத்த உள்ளத்தில் விளங்குவது அன்பு ஒன்றே ஆகும். அந்த உணர்வு பெற்றவர்களின் வாழ்வே தொண்டாக மலரும். தம் சுற்றுப்புறத்தார்க்கு இயன்ற அளவு தொண்டு செய்வதையே அவர்கள் கடமையாகக் கொள்வார்கள். தான் துன்புற்றாலும் பிறர் இன்பமாக வாழ்வதற்கு இயன்ற உதவி புரிய முன்வருவார்கள். அவர்களின் உள்ளம் அன்பாகவும், வாழ்வு தொண்டாகவும் மலர்ந்து விளங்கும்.

இவ்வாறு கடவுளின் ஆட்சி பற்றிய உண்மையை உணர்ந்து, அன்பைப் போற்றி வாழும் நெறியே கடவுள் நெறி ஆகும்.

**கண்ணில் காண்பதுன் காட்சி**
**கையால் தொழில்**
**பண்ணல் பூசை பகர்வது மந்திரம்**
**மண்ணொரு ஐந்தும் வழங்குயிர்**
**யாவுமே**
**அண்ணலே, நின் அருள்வடி வாகுமே.**

ஒவ்வொரு நாளும் கடவுள் வழிபாடு செய்தல் நன்மை பயக்கும்; உள்ளத்தை உயர்த்தும்; அமைதி நல்கும். நாள்தோறும் காலையில் கடமைகளைத் தொடங்குவதற்கு முன்பும் இரவில் கடமைகளை முடித்த பிறகும் அமைதியாக உட்கார்ந்து கண்மூடி மனத்தை ஒருமைப்படுத்தி வழிபடல் வேண்டும்.

கடவுள் எங்கும் என்றும் உள்ள பெருஞ்சக்தியாய் எல்லாப் பொருளுமாய் எல்லா உயிருமாய் விளங்குதலை எண்ண வேண்டும். எங்கெங்கு அன்பு உள்ளதோ அறிவு ஒளிர்கின்றதோ ஆற்றல் விளங்குகின்றதோ அங்கெல்லாம் கடவுளின் சக்தி வெளிப்படுதலை உணர வேண்டும்.

வானவெளியின் அண்டங்களை நோக்க இந்தப் பரந்த பெரிய உலகம் சிறியது. இதில் சிறிய ஒரு மூலை நாம் வாழ்வது.

இந்த உடலும் இதற்காக ஒரு சிறு குடும்பமும் ஒரு தொழிலகமும் சிறிய அளவில் உறவும் நட்பும் பங்கிட்டு அருளிய கடவுளின் அருளைக் கருத வேண்டும்; ஆற்ற இருக்கின்ற கடமைகளுக்கு வழிகாட்டி அறிவும் ஆற்றலும் தருமாறு வேண்டிக் கொள்ள வேண்டும். முன்னமே பாடி உணர்ந்த சில பாடல்களை மனத்தால் பாடி அவற்றின் உயர்ந்த உணர்வுகளிலே தோய வேண்டும். இவ்வாறு அன்றாடம் இருமுறையாவது செய்து வந்தால், மனத்திற்கு அமைதியும் ஆற்றலும் கிடைக்கும். ●




# நூல் வெளியீட்டு விழா

### மாண்புமிகு கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் விழா சிறப்புரை

---

பன்னிரு திருமுறை ஒலிபெயர்ப்புநூல்
(Panniru tirumurai phonetic transcription)
வெளியீட்டு விழா

சென்னைத் தமிழ்க்கணினி மொழியியற் கழகம் மற்றும் காந்தளகம் வெளியீட்டகம் சார்பில் **மொழியியற் பேரறிஞர், முனைவர் புனல்.க.முருகையன் எழுதிய 'பன்னிரு திருமுறை ஒலி பெயர்ப்பு' நூல்** வெளியீட்டு விழா, *15.06.2010* அன்று சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகம், பவளவிழாக் கலையரங்கில் நடைபெற்றது. **மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள் நூலை வெளியிட, திருப்பனந்தாள் காசித் திருமடம் இணை அதிபர் தவத்திரு சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள், தருமபுரம் ஆதீனம் மௌனமடம் கட்டளை விசாரணை முனைவர் தவத்திரு மௌன குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு சுப்பிரமணியத் தம்பிரான் ஆகியோர் நூல் படிகளைப் பெற்றுக் கொண்டனர்.

விழாவில் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூர் சிம் பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் சுப.திண்ணப்பன், ஆஸ்திரேலியா, சிட்னிப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப்பேராசிரியர் முனைவர் ஆ.கந்தையா, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறைத் தலைவர் முனைவர் ந.தெய்வ சுந்தரம், நூலாசிரியர் முனைவர் புனல்.க.முருகையன், காந்தளகம் அதிபர், மறவன் புலவு திரு.க.சச்சிதானந்தன்

ஆகியோர் இவ்விழாவில் நூலை வெளியிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றினார். அதன் விவரம் வருமாறு:

கடல் கோள்களை எதிர்கொண்டும், கால வெள்ளத்தைக் கடந்தும் சீரிளமைத் திறத்தோடும் திகழும் தமிழ் மொழிக்கு செம்மொழி எனும் சிறப்புத் தகுதியினைப் பெற்றுத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தரணியே புகழ்ந்தேத்தும் வண்ணம் கோவை மாநகரில் வரும் ஜூன் 23ஆம் நாளன்று தொடங்கி ஜூன் 27ஆம் நாள் வரை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை முன்னின்று சீரும் சிறப்புமாய் நடத்தும் வேளையில்–

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் சிறப்பு வெளியீடாக – காந்தளகம் பதிப்பகத்தார் சார்பில் மூத்த மொழியியல் அறிஞர், பேராசிரியர் – முனைவர் புனல் க.முருகையன் அவர்களின் படைப்பான 'பன்னிரு திருமுறை ஒலிபெயர்ப்பு' எனும் நூலின் வெளியீட்டு விழாவில் பங்கேற்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசில் தமிழ் நாட்டில் உள்ள திருக்கோயில்களை நிர்வகிக்கும் இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சர் என்ற முறையில் இத்துறையின் செயல்பாடுகள் குறித்து சான்றோர்கள் நிரம்பியுள்ள இச்சபையில் சில விவரங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழருக்கான சமய நெறி, வேதங்கள், திருக்கோயில்கள் முதலியவை தனித்தன்மை கொண்டவை. தமிழர் பண்பாட்டின் கலந்த ஆரிய பண்பாட்டால், வந்த மொழியான வடமொழி ஆதிக்க மொழியாகி விட்டது. கி.பி.7ஆம் நூற்றாண்டு தொடங்கி 12ஆம் நூற்றாண்டு வரை நடந்த பக்தி இயக்க காலத்தில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலான சைவ சமய நாயன்மார்களும், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார் முதலான வைணவ ஆழ்வார்களும் தாங்கள் பாடிய திருமுறைப் பாக்களாலும், பிரபந்தப் பாசுரங்களாலும் திருக்கோயில்களில் தமிழை மீண்டும் ஒலிக்கச் செய்தனர்.

ஆனால், அம்முயற்சி நீடிக்காமல் தோய்ந்த நிலையில் பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான கழக அரசு தமிழ்நாட்டு திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்யும் உரிமையை மீட்டுத் தருவதில் மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆண்டவன் சந்நிதிக்குள் நூலோர் சிலரால்தான் செல்ல முடியும் என்ற கொள்கையைத் தகர்த்தெறிந்து அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் எனும் சட்டத்தைக் கொணர்ந்து கடவுள் சந்நிதியில் அனைத்து மக்களும் சமமானவர்கள் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தியது டாக்டர் கலைஞர் அரசுதான் என்பதை இந்த சபைக்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களில் நம் அருளாளர்கள் பாடிய திருமுறைகளைப் பாடிப் பரவவும் அம்முயற்சி தொடர்ந்து நடைபெற இளம் தலைமுறையினரைப் பயிற்றுவிக்க ஓதுவார் பயிற்சி நிலையங்கள் நிறுவியும், திருவள்ளுவர், நால்வர், அருணகிரிநாதர், வள்ளலார் முதலான அருளாளர்களைப் போற்றி விழாக்கள் எடுத்தும், "அருச்சனை பாட்டேயாகும். ஆதலால் நம்மை சொற்றமிழ் பாடுக" என்று இறைவனே தம்மைத் தமிழில் போற்றி வழிபாடு செய்ய கட்டளை இட்டதாக சேக்கிழார் பதிவு செய்ததை இவ்வரசு கவனத்தில் கொண்டு தமிழ் வழிபாட்டிற்குரிய தமிழ் அர்ச்சனை நூல்களை வெளியிட்டும், சொற்பொழிவு, இசை, நடனம் முதலான கலைகளை வளர்த்தும் திருக்கோயில்களில் தமிழுக்குரிய இடத்தை மீட்டுத் தருவதில் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடனும் ஆழ்ந்த அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயல்பட்டு வருகிறது என்பதை இச்சபைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி, இப்போது வெளியிட்டுள்ள

பன்னிரு திருமுறை ஒலி பெயர்ப்பு நூல் குறித்து சிந்திப்போம்.

நூல் வெளியீட்டு விழா

தொன்மை மற்றும் வளமான இலக்கியப் பாரம்பரியம் கொண்ட கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு, சமஸ்கிருதம் போன்ற செம்மொழிகளுள் பல வழக்கிழந்து விட்ட நிலையில், மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பேசப்பட்டு வரும் மொழியாக – இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கிய, இலக்கண செல்வங்களைப் பெற்ற வளமிக்க மொழியாக, பண்டை வரலாற்றுக் காலந்தொட்டு இன்றளவும் மக்களிடையே அனைத்து நிலையிலும் சிறப்புற்று – உயிர்ப்புடன் வழக்கில் வாழ்ந்து வரும் மொழியாக விளங்கி வருவது நம் தாய்மொழியாம் தமிழ் மொழியே ஆகும்.

**சங்க இலக்கியம்:**

தமிழிலக்கிய வரலாற்றில் கி.பி.2ஆம் நூற்றாண்டு வரையிலான சங்க காலத்திய இலக்கியப் படைப்புகள் அனைத்தும் செவ்வியல் (Classic) தன்மை வாய்ந்தவையாகும்.

சங்க காலத்தில் மட்டும் சமயக் கொள்கைகளுக்குப் பெரிதும் இடங்கொடாது மக்களின் வாழ்க்கை முறை அகம், புறமென அமைய, அதையொட் டியே வாழ்வியல் இலக்கியங்கள் எழுந்தன.

மனை வாழ்க்கையை – இல்லற வாழ்க்கையை அகம் என்றும், ஓதல், பொருளீட்டல், போரிடல் முதலான நாட்டு வாழக்கையைப் புறமென்றும், சங்கத் தமிழர்கள் வாழ்க்கையை இரு பிரிவுகளாய் பகுத்தனர். அவையொட்டி எழுந்த சங்க இலக்கியங்களே எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் ஆகும்.

சங்க காலத்தில் இவ்வுலக வாழ்க்கை பற்றியே மிகுதியாகச் சிந்தித்திருக்கிறார்கள். இவ்வுடல் வாழ்க்கைக்கு இன்றியமையாத உயிரின் நிலை – ஆன்மாவைப் பற்றி அதிகம் சிந்தித்ததாகக் கூற இயலவில்லை.

**அற இலக்கியம்:**

சங்க காலத்தை அடுத்து கி.பி.3ஆம் நூற்றாண்டு முதல் 6ஆம் நூற்றாண்டு வரையுள்ள ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகள் காலக் கட்டத்தைத் தமிழர்கள் வரலாற்றில் – தமிழர் பண்பாட்டின் வரலாற்றில் இருண்ட காலமென வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் அழிந்தன. இவ்வேளையில் சமண, பௌத்த மதங்கள் ஆதிக்கம் செலுத்தின.

பிராகிருதம் எனும் வேற்றுமொழி, தமிழ் மண்ணின் ஆட்சி மொழியாகச் செங்கோலோச்சியது.

இந்தக் காலக்கட்டத்தில் தோன்றிய தமிழ் நூல்கள் பெரும்பாலும் சமணர்களால் இயற்றப்பெற்றவை, இந்தக் காலக்கட்டத்தை அற இலக்கிய காலம் என்பர்.

**பக்தி இலக்கியம்:**

இந்தக் காலக்கட்டத்தை அடுத்து, தமிழிலக்கிய வரலாற்றில் மூன்றாவது கட்டமாக உருப்பெற்ற பக்தி மறுமலர்ச்சி இயக்கக் காலம் தொடங்குகிறது. கி.பி.6 ஆம் நூற்றாண்டில் தொடங்கி 9 ஆம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ 300 ஆண்டு கால பக்தி இயக்கக் காலத்தில், தமிழ் மொழி – தமிழிலக்கியம்– தமிழக மக்களின் நிலை – இல்லற வாழ்க்கை – தமிழகக் கலைகள் முதலான தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் மீட்டெடுக்கப் பெற்றன.

சமயத்தின் அடிப்படையில் திருமாலை – விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டு, தோத்திரப் பாடல்களைப் பாடிய சமயப் பெரியோர்கள் ஆழ்வார்கள் என்றும் அவர்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்றும் அழைத்தனர்.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டு பாடல்களைப் பாடிய சமயப் பெரியோர்கள் நாயன்மார்கள் என்றும், அவர்கள் பாடிய தோத்திரப் பாடல்களின் தொகுப்பை பன்னிரு திருமுறைகள் என்றும் அழைத்தனர்.

பக்தி இயக்கத்தை மக்கள் முன் எடுத்துச் சென்றவர்களுள் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் முதன்மையானவர்கள்.

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் திருஞான

சம்பந்தர், திருநாவுக்கரசர் தொடங்கி சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர் முதலான அருளாளர்களோடு கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சேக்கிழார் ஈறாக இருபத்தேழு அருளாளர்கள் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், பெரிய புராணம் என அருளிய நூல்கள் மொத்தம் **52**. மொத்தப் பாடல்களின் தொகை **18,426** ஆகும். இந்தத் தோத்திரப் பாடல்களையே பின்னர் பன்னிரு திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர்.



இவை பக்திப் பனுவல்கள் மட்டுமல்ல; சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள். இவை வாழ்வியல் நூல் – அறநூல் – மெய்ப்பொருள் தன்மை உணர்த்தும் ஞான நூல் ஆகும். தமிழ் நாட்டின் **500** ஆண்டு கால சமய, சமூக வரலாற்றை அறியத் திருமுறைகளே துணையாகின்றன.

**பன்னிரு திருமுறை ஒலிபெயர்ப்பு–நூல் அறிமுகம்:**

தமிழர்களின் ஞானக் கருவூலமான பன்னிரு திருமுறையை–வேற்று மொழியாளர் ஒருவர், அவர்தம் மொழி வரி வடிவில்–தமிழ் மொழியின் ஒலி வடிவில் பாட– பயிற்றுவிக்க துணைபுரியும் முயற்சியாக பேராசிரியர் முனைவர் புனல் க.முருகையன் அவர்கள் எழுதி காந்தளகம் பதிப்பகம் வெளியிடும் பன்னிரு திருமுறை ஒலி பெயர்ப்பு (Panniru tirumutai phonetic transcription) எனும் நூல் இன்று வெளியிடப்பெற்றது.

ஒரு மொழியில் உள்ள செய்திகளை/ கருத்துக்களை வேறொரு மொழியில் தருவது மொழி பெயர்ப்பு–அதாவது translation என்பர்.

ஒரு மொழியின் ஒலிகளை வேறொரு மொழியின் எழுத்துக்களில் தகுந்த மாற்றங்களைச் செய்து அதாவது துணை வரி வடிவங்களை இணைத்து எழுதுவது ஒலி பெயர்ப்பு–phonetic transcription என்கின்றனர் மொழியியல் அறிஞர்கள்.

உதாரணமாக கடல்–பகல்– தங்கம் இந்த மூன்று தமிழ்ச் சொற்களில் பயின்று வரும் 'க' எழுத்தானது வரிவடிவில் ஒன்றுபோல இருந்தாலும், உச்சரிப்பில்–ஒலி வடிவில் அம்மூன்று சொற்களிலும் வேறுபட்டு அமைகின்றது.

கடல்–இதில் Ka என்றும்
பகல்–இதில் Ga என்றும்
தங்கம்–இதில் Nga ங என்றும்

மூன்று விதமாக ஒலிக்கப்படுவதைச் சாதாரண நிலையில் எந்தத் தமிழரும் உணர்வதில்லை.

பன்னிரு திருமுறை ஒலிபெயர்ப்பு எனும் இந்நூல் தமிழுக்கு ஒரு புதிய வகை இலக்கியப் படைப்பாகும்.

***1500*** ஆண்டுகளாகத் தமிழகத்தில் திருக்கோயில்களிலும், வீடுகளிலும் இசைக்கப்பட்டு– ஓதப்பட்டு வருகிற பன்னிரு திருமுறை பாடல்களைப் பிறமொழியினரும் தத்தம் மொழிகளின் வரிவடிவில் பழக்கப்பட்ட எழுத்தில் எவ்வித ஒலிச் சிதைவுமின்றி பாடுவதற்கு வாய்ப்பாக ஒலிபெயர்த்து (phonetic transcription) தருவதே இந்நூலின் நோக்கமும், குறிக்கோளுமாக உள்ளதறிந்து உள்ளபடியே பாராட்டுகிறேன்.

இன்று – உலகமெனும் பூமிப்பந்தில் எங்கங்கோ வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள்– பணி நிமித்தமாய் வெளிநாடுகளில் நிரந்தரமாய் குடியேறிவிட்ட தமிழகத்தைச் சார்ந்த தமிழ் மக்கள்– தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளவும், கண்டு கொள்ளவும் தங்கள் தாய்மொழி– தமிழ் மொழியின் வரிவடிவத்தை மறந்து விட்ட நிலையிலும், தங்களுக்குத் தெரிந்த மொழி வரிவடிவத்தின் மூலம் திருமுறைகளை ஓதி வழிபட இந்நூல் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூல் தமிழுக்குப் கிடைத்துள்ள ஒரு மொழியியல் துறையின் விளக்கம்– எழுத்தியல் அறிவியல் ஆய்வு ஆகும்.

தற்கால ஒலியியல் அடிப்படையில் தமிழ் மொழியின் எழுத்தியல் பெற்றுள்ள ஒரு புதிய பரிமாணம் என்றால் மிகையாகாது.

தற்கால கணினி ஆளுமையில், இந்நூல் தமிழுக்கோர் புதிய பரிமாணத்தைத் தரும் என்பதிலும் ஐயமில்லை.

உலக மொழிகளில் எந்தவொரு மொழியிலும் இம்முயற்சி இதுவரை சிந்திக்கப்படவில்லை.

உலகப் பெரு மத நூல்களாகிய பைபிள், குர்ஆன் ஆகிய நூல்களுக்குக் கூட இத்தகைய பிறமொழி ஒலி பெயர்ப்பு செய்யப்படவில்லை என்று இந்நூலில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டபோது, தமிழர்கள் அனைவரும் பெருமை கொள்ளவும், நூலாசிரியரை– பதிப்பாளரை தமிழுலகம் பாராட்டப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

நூல் வெளியீட்டு விழா

**நூலாசிரியர்–முனைவர் புனல் க.முருகையன்:**

இத்தகைய அரிய அறிவியல் பூர்வமான நூலைப் படைத்த பெரியவர், பேராசிரியர் முனைவர் புனல் க.முருகையன் அவர்கள் தமிழகத்தின் இன்றைய தலைசிறந்த ஒரே ஒலியியல் பேரறிஞர் ஆவார். எழுத்தியல், ஒலியியல் பாடங்களில் முதிர்ந்த ஆராய்ச்சியாளர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குநராகப் பணியாற்றி, பணி ஓய்விற்குப் பின்னர் பெங்களூரில் வசித்து வருபவர். 75 வயது முதிர்ந்த மூத்த தமிழறிஞர், தன் வாழ்நாள்கள் முழுமையும் தமிழ் ஒலியியல் ஆய்வுக்கே என்று அர்ப்பணித்து பணியாற்றி வருபவர். அவரை, அவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**பதிப்பாளர் காந்தளகம்–மறவன்புலவு க.சச்சிதானந்தன்**

இந்நூலைப் பதிப்பித்து வெளியிடும் 'காந்தளகம்' பதிப்பகத்தின் அதிபர், பெரியவர் திரு.மறவன்புலவு க.சச்சிதானந்தன் அவர்கள் ஆன்மிக வாழ்வும், மனித நேயமும் குறிப்பாக இறைவுணர்வுமிக்க மாமனிதர்.

இலங்கை அரசில் பல்வேறு உயர் நிர்வாகப் பொறுப்புகளை வகித்தவர். சைவ நூல்களில்–குறிப்பாக பன்னிரு திருமுறைகளில் ஆழங்கால்பட்ட தமிழறிஞர்.

காந்தளகம் எனும் பதிப்பகத்தின் வாயிலாக அரிய தமிழ் நூல்களை வெளியிட்டு தொடர்ந்து தமிழ்ப்பணி ஆற்றி வருபவர்.

பன்னிரு திருமுறையின் தருமை ஆதீன பதிப்பை மின்னம்பலத்தில் அரங்கேற்றியவர்.

தமிழரின் ஞானக் கருவூலமான பன்னிரு திருமுறையை, உலகெங்குமுள்ள பல்வேறு மொழியாளர்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணியைச் செய்து வருபவர்.

பன்னிரண்டு மொழிகளின் வரி வடிவங்களில் பன்னிரு திருமுறையின் **18426** பாடல்களை மின்னம்பலத்தில் எழுத்துப் பெயர்ப்பாக (translitration) தந்துள்ளார்

இந்நூலைப் பதிப்பித்துள்ள அவரின் நோக்கம், பன்னிரு திருமுறைகளைத் தமிழர்கள் மட்டுமல்லாமல் பிற மொழியினரும் எவ்வித ஒலிச் சிதைவும் இன்றி இசைக்க வேண்டும் என்பதேயாகும்.

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்ற அய்யன் திருவள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க, பேராசிரியரின் திறமையைக் கண்டறிந்து, அவரைக் கொண்டு பன்னிரு திருமுறை ஒலி பெயர்ப்பு எனும் இந்த அரிய நூலைத் தமிழுக்குத் தந்துள்ள மதிப்பிற்குரிய பெரியவர், தமிழறிஞர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் அவர்களின் முயற்சி உலகளாவிய தமிழர்கள் அனைவரின் பாராட்டுதலுக்கும் உரியது.

இறை உணர்வோடு தமிழ்ப்பணி, தமிழர்களுக்கான பணி ஆகியவற்றையும் இணைத்துச் செயல்படுகின்ற அப்பெருமகனார் வெளியிட்டுள்ள இந்த ஆய்வு நூல் பதிப்பாளரின் இறைப்பணிக்கும், தமிழ்ப்பணிக்கும் மட்டுமல்லாமல் தமிழ் மொழியியலுக்கும் குறிப்பாக கணினி மொழியியல் ஆய்வுலகிற்கும் மிகவும் பயன்படும் நூல் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.


நூலாசிரியருக்கும்–பதிப்பாளருக்கும் விழாவில் கலந்து கொண்ட தமிழறிஞர் களுக்கும் எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி, வணக்கம்.**

# திருமுறைகள் காட்டும் வாழ்வியல்

சித்தாந்த சரபம்
பேராசிரியர்.முனைவர்.வை.இரத்தினசபாபதி

## இளைத்தேன்



**முன்னுரை:**

திருமுறைகள் பன்னிரண்டு. திருமுறைகள் வெளிப்பட்ட இடம் பெரிதும் திருக்கோயில்களே. 'திருக்கோயில்' இதழில் திருக்கோயில்களில் திருவருளால் வெளிப்படுத்தப் பெற்ற திருமுறைகளின் விளக்கமாகிய வாழ்வியற் செய்திகள் வெளிவருவது மிகவும் பொருத்தமுடையதே.

திருமுறைகளை வெளிப்படுத்திய அருளாளர்கள் இருபத்து எழுவர். அவர்களுள் இறைவனும் ஒருவன். இறைவன் எழுதிய சங்க இலக்கியப் பாடல் ஒன்று சொற்குற்றம் இல்லையாயினும் பொருட்குற்றம் உடையது என்று ஆய்வுரை எழுந்தது. தள்ளப் பெறவில்லையாயினும் கொள்ளப் பெற்றது. பின்னர், இறைவன் முயன்று எழுதிய நூல் ஒன்று (இறையனார் களவியல்) குறையுடையது என ஆய்வுக் குழுவினர் தீர்ப்பளித்தாலும் அந்நூலும் ஏற்கப் பெற்றது. முன்னது குற்றம் உடையது; பின்னது குறையுடையது. இறைவன் பின்னர், பெரிதும் முயன்று எழுதிய 'திருமுகப் பாசுரம்' என்ற ஒரு பாடல் திருமுறையில் இணைக்கப் பெற்றுள்ளது.

'பதிகப் பெருவழி' எனப் பெறும் திருமுறைப் பெருநெறியைத் தொடங்கியவர் 'பேயார்' எனப் பெறும் காரைக்காலம்மையாரே யாயினும், அப்பெருவழியைத் தலைமை தாங்கி நடத்தியவர் திருஞான சம்பந்தரே என்று கொள்வது சைவ மரபு.



நாற்பத்தொன்பது நூல்களின் தொகுப்பாகிய திருமுறைகள் பாடல்களின் எண்ணிக்கையால் பதினெண்ணா யிரத்தைக் கொண்டன என்று கொள்வது சைவ மரபு.

திருப்பதிகப் பெருவழி எனப்பெறும் நீண்டநெறியும் துறையும் இணைந்த ஒரு பெரும் வாழ்வியற்பாதையைத் தொடங்கிய காரைக்கால் அம்மையாரின் காலம் மாணிக்க வாசகரின் காலத்துக்கு முற்பட்ட தென்பது மறுக்க முடியாத வரலாற்றுண்மையாகும். மாணிக்க வாசகரின் காலத்தைப் பற்றிய இரு அணிகள் உண்டு.

கி.மு.; கி.பி. என. யான் முதல் அணியைச் சேர்ந்தவன். வரலாற்றை விரிக்க வேண்டிய இடம் இது இல்லை.

காரைக்கால் அம்மையார் காலத்தில் தில்லைப் பொது எனப் பெற்ற கூத்தப்பெருமான் ஆடும் இடம் இல்லை. ஆடும் கூத்தனின் இடத்தைத் தேடித் திருக்கயிலாயம் வரை சென்று, அங்கும் இல்லை எனத் தெரிந்து, திருக்கயிலைப் பெருமான் வழிகாட்டவே, மீளவும் தமிழகம் வந்து திருவாலங்காட்டில் கூத்தப் பெருமானைக் கண்டதோடு, அவன் ஆடும் திருக்கூத்தையும் கண்டு வணங்கி, அங்கேயே இருப்பவர் பேயார் எனப் பெறும் காரைக்கால் அம்மையார்.

மாணிக்கவாசகப் பெருமான் காலத்தில் தில்லைப் பொதுமன்றம் வரலாற்றுப் படுத்தப் பெற்று விட்டது. எனவே, காரைக்கால் அம்மையார் காலம் மாணிக்கவாசகர் காலத்துக்கு முற்பட்டது என்று கொள்வதில் தவறு ஏதும் இல்லை.

திருவாசகத்தைத் திருவாய் மலர்ந்தருளிய மாணிக்கவாசகர் காலத்துக்கு முற்பட்டவராகிய காரைக்காலம்மையார் காலம் முதல் (கி.மு. நான்காம் நூற்றாண்டு) சேக்கிழார் காலமாகிய கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை உள்ள பதினாறு நூற்றாண்டுகளைத் திருமுறைக் காலம் என்று கொள்ளலாம்.திருஞானசம்பந்தரை முதலாகவும் சேக்கிழாரை இறுதியாகவும் கொண்டு திருமுறைக் காலம் சற்றொப்ப ஏழு நூற்றாண்டுகள் என வரையறைப் படுத்துபவர்களும் உண்டு.

உமையம்மையும் நடுங்குமாறு கூத்தப் பெருமான் திருவாலங்காட்டில் இயற்றும் திருக்கூத்தினை அவன் திருவடியின் கீழ் அமர்ந்து காணும் பேறு பெற்றவர் பேயார் எனப் பெறும் காரைக்கால் அம்மையார். "அறவா! நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க" என்ற வரத்தைக் கேட்டுப் பெற்று, இன்றும் ஆலங்காட்டடிகள் ஆடும் (கூத்தப் பெருமான்) அடியின் கீழ் இருத்தல் நிலை பெற்றவர் காரைக்கால் அம்மையார். அதனாலேயே அறுபத்து மூவர் வரிசையில் இருந்த கோலத்தில் (அமர்ந்த கோலத்தில், ஏனைய நாயன்மார்கள் நின்ற கோலத்தில்) இருக்கும் பேறு பெற்றார்.

"நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே" என்று திருவாசகத்துக்குச் சிவபுராணத்துள் அருளியிருக்கும் மாணிக்கவாசகர்,

"என்னையும் இருப்பது ஆக்கினன்" என்று, திருவாசகம், திருவண்டப்பகுதி, 179ஆம் வரியில் கூறியிருப்பதை உணர்தல் வேண்டும்.

'என்னையும் இருப்பதாக்கினன்' என்பதால் மணிவாசகர் தம்மை இழிவுபடுத்திக் கூறுகிறார் என்ற ஒரு கருத்து நமக்கு ஏற்பட்டாலும், அவருக்கு முன்னேயும் இருத்தல் நிலை பெற்றவர்கள் உண்டு என்று கொள்ளவும் அந்த வரி இடம் தருகிறது. தமக்கு முன் காரைக்காலம்மையார் இருத்தல் நிலை அருளநுபவம் பெற்றவர் என்று கொள்ளலாம்.

மணிவாசகருக்குப் பின்னர் அப்பரடிகளும் அத்தகைய அருளநுபவம் பெற்றிருக்கிறார் என்பதை அவர் அருளும் ஒரு பாடலால் அறியலாகும்.

"இருந்து சொல்லுவன் கேண்மின் ஏழைகாள்" என்பது அப்பரடிகள் திருவாக்கு. 5.60.5.

பொதுவாக, திருமுறைகள் அனைத்தும் இறைவனைப் போற்றிப் புகழும் பாடல்களைத் தன்னுட் கொண்டவை என்று கூறப் பெற்றாலும், அவை மக்கட் சமுதாய வாழ்வியல் நூலாகவும், அறம் தழைக்கும் அறஇயல் நூலாகவும், வாழ்வியல் நெறிகளை வரையறைப் படுத்தும் மெய்ப்பொருள் நூலாகவும் விளங்கும் அடிப்படைகளைக் கொண்டவை. அதனாலேயே, காலந்தோறும் அவைகளை ஆய்ந்தும் தோய்ந்தும் அநுபவித்துணர்ந்த சான்றோர்கள், அவ்வகை வாழ்வியற் சிறப்புகளையெல்லாம் எடுத்துக்கூறி, மாந்தர்தம் வாழ்வியற் கூறுகளையும் அவர்கள் சமுதாயத்தோடு இணைந்து வாழ வேண்டிய இன்றியமையாமைகளையும் வலியுறுத்திக் கூறி வந்துள்ளனர்.

திருமுறைகள் இறைவன் புகழை எடுத்துக் கூறுவன என்ற கருத்தை இக்கட்டுரைத் தொடர் மறுக்கவில்லை. ஆயினும், தமிழகத்தில் புண்ணியப் பதினாறு நூற்றாண்டுக் கால மக்கள் வாழ்க்கையில் எத்தகைய வாழ்வியல்

தாக்கங்களை திருப்புமுனைகளைத் திருமுறைகள் வரலாற்றுப் படுத்தியிருக் கின்றன என்பதை ஓரளவு மையப்படுத்தி, மக்கட் சமுதாயத்திற்கு ஒருவகை வாழ்வியல் விழிப்புணர்வை உண்டாக்குவதே இக்கட்டுரைத் தொடரின் மையக் கருத்தாக அமைகிறது என்று கருதுதல் வேண்டும்.

**இளைத்தேன்**

மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்துக்குப் பல பெருமைகள் உண்டு. எனினும் திருவாசகத்தின் தலையாய பெருமை ஒன்று உண்டு. மாணிக்க வாசகர் தாம் தனித்தனியே பாடியவைகள் அனைத்தையும் தொகுத்துச் சொல்ல, இறைவன் தனக்கென ஒரு பிரதி எழுதி எடுத்து வைத்துக் கொண்ட பெருமையே அது. "திருவடிக்கீழ்ச் சொல்லிய பாட்டு" என மணிவாசகரே எடுத்துக் கூறிச் சிறப்பிப்பதைச் சிவபுராணத்துள் காணலாம்.

ஐம்பத்தொரு தலைப்புகளில் அமைந்தது திருவாசகம். சில தலைப்புகளில் சில சில பாடல்கள் இல்லையென்பர். ஆயினும் அது ஒரு முழுமையான நூல். திருவாசகத்தின் முதல் தலைப்பானது சிவபுராணம். அதன் தொடக்கத்தில் வாழ்க என்ற சொல் ஆறுமுறை வருகிறது; வெல்க என்ற சொல் ஐந்து முறை வருகிறது. போற்றி என்ற சொல் எட்டு முறை வருகிறது. 6; 5; 8 என நின்ற வகையில் 658 பாடல்களைத் தொகை எண்ணாகக் கொண்டு விளங்குவது திருவாசகம். பெரும் புலவர் நாகி செட்டியார் அவர்கள் தாம் எழுதிய மாணிக்கவாசகர் வரலாற்றில் விடுபட்ட பாடல் என ஒரு பாடலைக் காட்டியுள்ளார். ஆயினும் திருவாசகப் பாடல்களின் தொகை 658 என்பதே சைவப் பெருமக்களின் மரபு வழிப்பட்ட கொள்கை.

இனி, திருவாசகத்தின் முதல் தலைப்பாகிய சிவபுராணத்தில்

**"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்,**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்";**

என்ற வரிகள் (26–31) அருளப் பெற்றுள்ளன. மேலே குறிப்பிடப் பெற்ற வரிகளுள் அமைந்துள்ள 'இளைத்தேன்' என்ற சொல்லே ஆய்வுப் பொருளாக இக்கட்டுரையில் அமைந்துள்ளது.

எல்லாப் பிறப்பும் பிறந்தேன் என்று அருளிச் செய்யும் மணிவாசகப் பெருமான் முனிவர், தேவர்கள் ஆகியோரையும் இணைத்துக் கொள்ளுவதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

'இளைத்தேன்' என்ற சொல்லுக்கு வருந்தினேன் என்று பொதுவாக உரை கண்டுள்ளார்கள். முனிவராகவும், தேவராகவும் பிறப்பு எய்திய போதும் வருந்தியதாக மணிவாசகப் பெருமான் திருவாக்கினுக்கு உரை கண்டுள்ளார்கள். தேவர்கள் சுவர்க்க உலகில் உள்ளவர்களாகவும் இன்பம் என்ற அநுபவமே அவர்கள் துய்ப்பதாகவும் நூல்களிற் கூறப் பெறுகின்றன.

மணிவாசகப் பெருந்தகையோ எல்லாப் பிறப்பும் தாம் பிறந்ததாகவும் துன்பத்தையே துய்த்ததாகவும் முற்றும்மை கொடுத்துக் கூறியருளுகின்றார் (எல்லாப் பிறப்பும்) என்பது பொது உரை.

"மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்," என்று அடுத்த வரிகளில் மணிவாசகப் பெருமான் கூறியருளுவதால் எல்லாப் பிறப்புகளிலும் இறைவன் திருவடிகளைக் காணாமையே துன்பத்துக்குக் காரணம் என்றும் இன்று மெய்யாகத் திருவடியைக் கண்டுவிட்டதால் துன்ப நீக்கம் பெற்றேன் என்றும் மணிவாசகர் அருளியிருக்கின்றார் என்று கருதி உரையெழுதிய பேரறிஞர்களும் உண்டு.

'இளைத்தேன்' என்ற மணிவாசகர் திருவாக்கினுக்கு ஏற்ற பொருளைக் காணுதல் வேண்டும்.

பிறப்பு எதுவாக இருந்தாலும் உடம்பு

எடுத்த ஆன்மாவுக்கு இளைத்துப் போதல், பருமனாதல் என்ற மாற்றங்கள் அமைதல் இல்லை.

எந்த ஓர் ஆன்மாவானது எந்த ஒரு பிறப்பை எடுத்தாலும், அப்பிறப்பில், அதற்குப் புறஉடல், நுண் உடல், ஆன்மா, ஆன்மாவினுள் இறைவன் என்ற நான்கும் உண்டு. அந்த அளவில் அது ஒரு சமுதாயம்.

ஆன்மாவுக்கு உடலானது கருவி. புற உடலாயினும் அக உடலாயினும் அவையெல்லாம் ஆன்மாவுக்குக் கருவிகளே. ஆன்மாதான் கருவிகளை இயக்கிப் பயன் பெற வேண்டும்.

ஆன்மாவின் இயக்கத்துக்கு உடற்கருவிகள் அடங்கி நடக்க வேண்டும். கருவிகளை அடக்கிப் பணி செய்ய வைக்க வேண்டியது ஆன்மா. ஆனால், உடல் முதலிய கருவிகளுக்கு அடங்கி, அவைகள் இடும் கட்டளைகளுக்கு ஏற்ப ஆன்மாவானது செயற்படுமே யானால் அதுமுறை மாற்றம்.

மணிவாசகர் குறிப்பிடும், 'இளைத்தேன்' என்ற வழக்காற்றுக்குப் பொருள் என்ன? யான் எடுத்த எல்லாப் பிறவிகளிலும் உடலுக்குப் பணி செய்தேனே யொழிய, கருவிகளாகிய உடல் எனக்குப் பணி செய்யுமாறு அமையவில்லை என்று எடுத்துக் காட்டுகின்றார்.

தனி மனிதன் இன்று என்ன செய்கிறான்? முப்பது நாற்பது வயது வரையில் உடல் தனக்குப் பணி செய்யுமாறு வாழ்கிறான். அதன் பிறகு, அவன், தான் எடுத்த உடலுக்குப் பணி செய்தே வாழ்வியலைக் கடத்துகிறான். எனவே, இளைத்தேன் என்பதற்கு எல்லாப் பிறப்பிலும், எடுத்த உடம்புக்கு நான் பணி செய்தேன் என்ற அவல நிலையை எடுத்தாளுகிறார் மாணிக்க வாசகர்.

எசமானி வேலைக்காரிக்குப் பணிவிடை செய்தது போன்ற என்னுடைய நிலை என்று இயல்பு நிலையை எடுத்துக்காட்டுகிறார்.

சங்க கால வழக்கில் 'இளையர்' என்பது பணியாளர்களைக் குறிக்கும். "யாண்டு பலவாக" என்ற சங்கப் பாடலில் "யான் கண்ட அரையர் என் இளையரும்" என்ற தொடரின் பொருளைக் கண்டு தெளிக. இன்றும் இலங்கைத் தமிழர்கள் பணி ஓய்வு பெற்றவர்களை 'இளைப்பாறிய' என்ற அடைமொழிச் சொல்லால் குறிப்பதைக் காணலாம்.

**முடிப்புரை:** உடலுக்கு அடிமையாக வாழ்தல் என்ற வாழ்வியலை மறுத்து, உடலைத் தனக்கு அடிமையாக ஆக்கி வாழ்பவனே, ஆன்மிக வாழ்க்கைப் படியில் ஏறி நின்று வெற்றி பெற்றவன் ஆகிறான்.

'உடலுக்கு நீ அடிமையாகாதே; உடம்பு உன் கருவிகள். உடம்பை உனக்கு அடிமையாக்கி வாழ்வியல் வெற்றி கொள்'' என்பதே மாணிக்கவாசகர் உலகவர்களுக்குக் கூறும் மணிமொழி.

வெற்றி வாழ்க்கையின் முதற்படியை உணர்ந்து, செயன்மைப்படுத்தி, வாழ்வியலைத் துய்ப்போமாக.

●


## திருக்கோயில்

### திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,


119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

நீதிக்கதை

# அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது...?

## தென்கச்சி கோ.சுவாமிநாதன்



ஓர் ஊர்லே ஒருத்தன் இருந்தான். ஆடு, மாடு மேய்க்கிறது தான் அவனுக்குத் தொழில். ரொம்ப நல்லவன், ஏழை. எல்லார்கிட்டேயும் பணிவா நடந்துக்குவான், நேர்மையா நடந்துக்குவான், உண்மையா நடந்துக்குவான். அது மட்டுமில்ல... ரொம்ப புத்திசாலித்தனமா செயல்படுவான். இவனை ஒருநாள் அந்த நாட்டு மன்னர் தற்செயலா சந்திச்சார். இவனுடைய அறிவு, ஆற்றல் அவருக்கு ரொம்பப் பிடிச்சிப் போச்சி. இப்படிப்பட்ட ஒருத்தன் நம்ம கூட இருந்தா அது இந்த தேசத்துக்கு நல்லதுன்னு நினைச்சார்.

உடனே அவனைக் கூப்பிட்டுகிட்டு அரண்மனைக்குப் போயிட்டார்.

அங்கே அவனுக்குச் சில பொறுப்புகளைக் கொடுத்தார். கொடுத்த பொறுப்புகளை ஒழுங்கா செஞ்சான். கூடிய சீக்கிரமே அவனை அந்த நாட்டுக்கு முதன்மை அமைச்சரா ஆக்கிப் புட்டார். ஆடு மேய்ச்சிக்கிட்டிருந்த ஒருத்தன் ஆட்சிப் பீடத்துக்கு வந்துட்டா...

பார்த்துக் கிட்டிருக்கிறவங்க சும்மா இருப்பாங்களா? ஏற்கனவே அந்தப் பதவி நமக்குக்கிடைக்கும்ன்னு நினைச்சிக்கிட்டிருந்த வங்கல்லாம் அவனைப் பார்த்துப் பொறாமைப்பட ஆரம்பிச்சுட்டாங்க.

அதுமட்டுமல்ல...

அவனை ஆட்சிப் பீடத்துலே இருந்து கீழே இறக்கறது எப்படின்னு யோசிக்கவும் ஆரம்பிச்சாங்க. அவனைப் பத்தி இல்லாததும் பொல்லாததுமான வதந்திகளைக் கிளப்பி விட்டாங்க,

அவனை அவமானப்படுத்தற விதத்துலே எதை எல்லாம் செய்ய முடியுமோ அதை எல்லாம் செஞ்சாங்க.

இருந்தாலும் மன்னருக்கு அவன் மேலேயிருந்த நம்பிக்கை கொஞ்சம் கூடக் குறையவே இல்லை.

ஒரு சமயம் அந்த மன்னர் அவனை இன்னொரு முக்கியமான மாநிலத்துக்கு ஆட்சியாளரா அனுப்பிச்சார். இதுதான் இவங்களுக்குச் சரியான சமயம். அவன் தலைநகரை விட்டுப் புறப்பட்டுப் போனதும் இவங்கள்லாம் மெதுவா மன்னர் கிட்டே போனாங்க... தலையைச் சொறிஞ்சுகிட்டு நின்னாங்க...

"என்ன விஷயம்?"ன்னு கேட்டார் மன்னர்.

"மன்னா... எங்களை மன்னிக்கணும்...!"

"எதுக்காக மன்னிக்கணும்... நீங்க என்ன தப்பு செஞ்சீங்க...?"

"நாங்க எதுவும் தவறு செய்யலே... நம்ம தேசத்துலே தவறு எதுவும் நடக்கக்கூடாதேங்கற கவலையிலே உங்ககிட்டே வந்திருக்கோம்!"

"என்ன சொல்றீங்க... கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க... நேரடியா விஷயத்துக்கு வாங்க!"

"அரசே! நாங்க ஒரு புகார் கொடுக்க வந்திருக்கோம்!"

"என்ன புகார்?"

"ஊழல் புகார்!"

"யார் பேர்லே?"

"உங்கள் நம்பிக்கைக்கு உரிய ஒருத்தர் பேர்ல..."

"யார் அது?"

"இந்த நாட்டு முதன்மை அமைச்சர்...

இப்போது இன்னொரு மாநிலத்துக்கு ஆட்சியாளரா அனுப்பி வச்சிருக்கீங்களே, அவர்!"

அரசர் திகைத்துப் போனார்.

"என்ன சொல்றீங்க?"

"உண்மையைத் தான் சொல்கிறோம் மன்னா...

"அவன் எங்கு சென்றாலும் ஒரு பெட்டியை கூடவே எடுத்துக் கொண்டு போகிறான்... முறை கேடாக தான் சேர்த்த செல்வத்தை அந்தப் பெட்டியில் தான் மறைத்து வைத்திருக்கிறான். அந்தப் பெட்டியை விட்டு அவன் பிரிவதே இல்லை. வெளியூர்களுக்குச் செல்லும் போதெல்லாம் அதை ஓர் ஒட்டகத்தின் முதுகில் வைத்து எடுத்துக் கொண்டு போகிறான். இரவு நேரங்களில் தனது கூடாரத்தில் தான் தனியே இருக்கும்போது மட்டும் அதைத் திறந்து சரி பார்த்துக் கொள்கிறான்!"

"சரி... இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அவனுக்குத் தெரியாமல் பின்தொடர்ந்து சென்று, இதை நாங்கள் கண்டுபிடித்தோம்!"

"சரி... நீங்கள் போகலாம்!"

புகார் சொல்ல வந்தவர்கள் உற்சாகத்தோடு திரும்பிப் போனார்கள்.

இந்தப் புகாரில் உண்மை இருக்காது என்று அந்த மன்னர் மனப்பூர்வமாக நம்பினார்.

என்றாலும் உண்மை என்ன என்பது ஊருக்குத் தெரிய வேண்டுமே!

ஒரு நாள் நள்ளிரவில் மன்னர் புறப்பட்டு அவன் தங்கியிருந்த கூடாரத்திற்குள் திடீர் என்று நுழைந்தார்.

அவன் அந்தப் பெட்டியை அப்போது தான் திறந்து பார்த்துக் கொண்டிருந்தான். மன்னர் கவனித்தார்! அந்தப் பெட்டியில் அப்படி என்னதான் இருக்கிறது?

ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது அவன் அணிந்திருந்த அந்தப் பழைய சட்டையும் கட்டியிருந்த துண்டும் அதிலே இருந்தன.

"எதற்காக இப்படி?" என்பது போல மன்னர் அவனைப் பார்த்தார்.

அவன் சொன்னான்:

"மன்னரே! பதவி – பணம் – புகழ் – இந்த மூன்று விஷயங்களிலும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. இவை, சுலபமாக நம்மை உயரே கொண்டு செல்லும்... நாம் எச்சரிக்கையாக இல்லா விட்டால் சுலபமாக கீழேயும் தள்ளிவிடும்.

அப்படி விழுந்தால் அந்த அடி பலமாக இருக்கும். உண்மை, நேர்மை, பணிவு இவை நம்மிடம் இருக்குமானால் அப்படிக் கீழே விழுந்து அடிபட வேண்டிய அவசியம் ஏற்படாது.

நான் அடிபடாமல் இருக்க விரும்புகிறேன். அதனால் தான் எவ்வளவு உயர்ந்த பதவிக்கு வந்தாலும் என்னுடைய பழைய நிலையை அவ்வப்போது நினைவுபடுத்திக் கொள்ளவே இந்த ஏற்பாடு!

பதவியைப் பொறுத்தவரையில் நான் முதன்மை அமைச்சராக இருக்கலாம்.

ஆனால், பணிவைப் பொறுத்த வரையில் நான் பழைய அந்த ஆடு மேய்க்கிற மனிதன்தான்!"

அரசனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர். அவனை அப்படியே தழுவிக் கொள்கிறார்.

இது பெர்சிய நாட்டில் சொல்லப்பட்ட ஒரு கதை. சுவாமி சிவானந்தர் இதை, தமது சீடர்களுக்குச் சொல்வதுண்டு.

"சாதகர்களே! துறவியைப் போல வாழ்ந்த அவனிடமிருந்து நீங்கள் பாடம் கற்றுக் கொள்ளுங்கள்!" என்று அவர் சொல்வாராம்.

'பெருக்கத்து வேண்டும் பணிவு' என்பது திருவள்ளுவர் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிற அறிவுரை.

இதைத் தவறாகப் புரிந்து கொண்ட ஒருத்தர் தருகிற விளக்கம் வேறுமாதிரியானது!

"நான் எப்போதும் பணிந்து, குனிந்துதான் நடக்கிறேன்!" என்பார் அவர்.

"ஏன்?" என்று கேட்டால் அவர் சொல்கிற பதில்:

"உடம்பு பெருத்துப் போச்சு... நிமிர்ந்து நடக்க முடியலே...!"

●

# முதலாசார்யர் ஸ்ரீமந் நாதமுனிகள்

## ஸ்வாமி

**ஸ்ரீமந் நாத முனிகள்:**

முதலாசார்யர் இறைவன் தான். ஆனாலும், அந்த இறைவனால் 'மயர்வற மதிநலம்' அருளப்பட்டவர்களைப் பன்னிரு ஆழ்வார்கள் என்று வரையறை செய்த பிறகு ஆசார்யனானவர், ஸ்ரீமந் நாத முனிகளே. அதுவும் தமிழ்மறை, திராவிட வேதம் அருளிய ஆழ்வார்களைப் பிரசாரம் செய்த முதலாசார்யர் நாதமுனிகளே. இவரில்லையெனில் ஆழ்வார் அருளிச் செயல்கள் இல்லை. அரையர் சேவை கிடையாது. வடமொழி வேதத்திற்கும், திராவிட அருளிச் செயல்களுக்கும் 'ஐக கண்டத்வம் கண்டு (இரண்டும் ஒன்றே என) ஸ்ரீமத் இராமாநுஜர் தம் ஸ்ரீபாஷ்யத்தில் நிலை நாட்டியிருக்க முடியாது.

'தெளியாத மாநிலங்கள் தெளிந்தோமே' என்று வேதத்தில் 'புரியாத இடங்களையும் புரிந்து கொண்டோமே' என்று ஸ்ரீ வேதாந்த தேசிகரும் முழங்கியிருக்க முடியாது. அருளிச் செயல்களின் அருமை அகிலமறிந்திருக்காது.

**ஆழ்வார்கள்:**

பன்னிரு ஆழ்வார்களுக்கும் இறைவனால் குறைவில்லா ஞானம் அருளப்பட்ட பிறகு தமிழகம் முழுவதும் அவர்களின் பாசுரங்கள் தமிழ்ப் பிரபந்தம் நன்கு சாதாரண பாமர மக்களிடமும் பரவியிருந்தது. பிறகு ஒரு நூறாண்டில் மறைந்து போயிற்று.

ஸ்ரீமந் நாத முனிகள் காலத்தில் பெரு வெள்ளம் வடிந்து சில துளி மட்டுமே மிஞ்சியது போல ஆயிற்று.

ஆழ்வார் என்போர், எம்பெருமானின் குணங்களில் ஆழ்ந்து, அர்ச்சாவதார எம்பெரு மானை முக்கியப்படுத்தி திருத்தலங்களையும், பெருமாளையும் மங்களாசாசனமும் செய்து தம் பலபடியான அனுபவங்களைப் பாடித் தமிழ்ப் பாசுரங்களாக்கினர். இதுவே நாலாயிரம், திவ்யப்பிரபந்தம். இது வேதம் போன்றது. வேத மந்திரங்களை அனுபவப்பட்டுக் கூறிய ரிஷிகள் போல ஆழ்வார்கள்.

**ஆசார்யர்:**

ஆழ்வார்களின் பாசுரங்களுக்கும் இவற்றின் மூலமான திருமந்திரம், த்வயம், சரமச் செய்யுள் என்ற மூன்று ரகசியங்களுக்கும் உரை எழுதியும், அதேபோல உபநிடதம், கீதை, பிரும்ம சூத்ரங்களுக்கும் விளக்கம் செய்தும் வேதம், இதிகாசம், புராணம், ஸ்மிருதிகளை விளக்கியும், வடமொழி, தென்மொழி சாத்திரங்களை விளக்கியும் பரம வைதிகமான விசிட்டாத்வைத, ஸ்ரீவைணவ மதத்தை நிலை நாட்டியவர்களே ஆசார்யர். இவர்களுக்குத் தமிழ், வடமொழி வேத சாத்திரங்கள் இரண்டும் சமமாகும். எனவே, 'உபய வேதாந்தமே' ஸ்ரீவைணவம் என்றானது.



இவர்களுள் ஸ்ரீமந் நாதமுனிகளே முதல்வராவார். பெருமாளும், பிராட்டியும், விஷ்வக்ஷேனரும் பரமபதத்தில் உள்ளபடி யாலும், நம்மாழ்வார் ஆழ்வாருள் உள்ளார் என்பதாலும், இந்த நம்மாழ்வாரை நேரில் தியான சமாதியில் கண்டு, அவரிடமே எல்லா அர்த்தங்களையும் கேட்டு, அஷ்டாங்க யோக உபதேசமும் பெற்று வந்த ஸ்ரீமந் நாத

முனிகளே முதலாசார்யர் எனப் போற்றப் பெறுகிறார். இவரின் வைபவமே (வாழ்வே) ஸ்ரீ வைணவத்தின் வரலாறும் ஆகும்.

**சிறுதுளி:**

ஸ்ரீமந் நாத முனிகள், சேனை முதலியாரின் முக்கியப் படைத் தலைவர் கஜாநானர் எனும் யானைமுக நித்ய சூரியின் அம்சமாக அவதரித்தவர். சோழ நாட்டில் வீரநாராயணபுரம் ஆகிய காட்டுமன்னார் கோயில் என்னுமிடத்தில் கி.பி.823 சோபக்ருத வருடம், ஆனி 7ஆம் தேதி, புதன் கிழமை, பௌர்ணமியன்று, அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தார். ஈச்வர பட்டர் இவரின் தந்தை. சொட்டைக் குலம் என்பர். சடமர்ஷண கோத்திரத்தில் அவதரித்த இவருக்கு, ஸ்ரீரங்கநாதன் என்று இயற்பெயர். யோகக் கலை நிபுணர் என்பதால் ஸ்ரீரங்கநாத முனிகளாகி ஸ்ரீமந் நாதமுனிகளாயினார்.

இவர் தம் குடும்பத்துடன் வடதேசம் சென்று பல திருத்தலங்களைச் சேவித்து விட்டு யமுனைக் கரையில் ஸ்ரீகோவர்த்தனபுரத்தில் தங்கியிருந்தார். ஒருநாள் காட்டுமன்னார் கோயில் பெருமாள் கனவில் வந்தழைக்கவே திரும்பி பிறந்த மண்ணில் வந்து பெருமாள் கோயிலில் கைங்கர்யம் செய்து வந்தார்.

பெருமாளைச் சேவிக்க வந்த சில வைணவர்கள், 'ஆராவமுதே" என்ற திருவாய் மொழியை அனுசந்தித்து மகிழ்ந்தனர். இராஜமன்னார் பெருமாள் தொண்டில் இருந்த நாதமுனிகள் அதைக் கேட்டார். உள்ளம் உவகை கொள்ள, ''இத்திருவாய்மொழி சாற்றுப் பாட்டிலே "ஓராயிரத்துள் இப்பத்தும்" என்று வருகிறதே அந்த ஆயிரமும் தங்களுக்கு வருமோ?" என்று வைணவர்களைக் கேட்டார். அதற்கு, அவர்கள் "இப்பத்து தவிர மற்றவை மறைந்து விட்டன," என்று சொல்லி சென்று விட்டனர். இதே நினைவாக நம்மாழ்வார் ஊரான திருநகரிக்குச் செல்லத் தீர்மானித்தார்.

சிறுதுளியான அருளிச் செயல் அவரை இழுத்தது.

**தேவகானம்:**

ஒரு தேவதாசி, சோழ இராஜசபைக்கு வந்தாள். இன்னொரு நாட்டிய மங்கையும் வந்திருக்க இருவரும் ஆடிப் பாடித் தங்கள் திறமையைக் காட்டினர். சபையினருக்குத் தேவகானம் தெரிந்திருக்கவில்லை. ஆகவே, உள்ளூர் தாசியின் இசையே சிறந்தது என்று பரிசு பல அளித்தனர். தேவ கானம் அறிந்த மற்ற தாசி கோயிலில் வந்து இறைவனைப் பாடினாள். அதைக் கேட்ட நாதமுனிகள் மிகவும் அவளை மெச்சிப் பாராட்டினார். உடனே வருத்தம் தீர்ந்த அவள், நாதமுனிகளிடம் இராஜசபையில் நடந்ததைச் சொன்னாள்.

கேட்ட அவர், அவளுடன் சபைக்குப் போய், அரசரிடம் அவளின் உயர்ந்த தேவகானம் பற்றிக் கூறினார். உடனே, நாதமுனிகளிடமே, தேவகானம் பற்றிக் கேட்டு அவரையே பரீட்சித்தனர்.

"32 தாளங்களை உடைய தேவகானப் படி தாளம் ஒலிப்பதைக் கேட்டே அதன் எடையைக் கூறலாம்" என்று கூறிய நாதமுனிகள் பலர் பலவித தாளங்களை வாசிக்க அவற்றின் எடையைக் கூறி அவர்களை அயர வைத்தார்.

கடைசியில் தேவகானம் உயர்ந்தது என அறிந்த அரசர் அதை அறிந்த அவளுக்கு ஏகப்பட்ட பரிசளித்தனுப்பினார்.

**மதுரகவிப் பாசுரம்:**

'குருகூர்ச் சடகோபன்' என ஆழ்வார் தம்மை அறிவித்துக் கொண்டிருப்பதால், குருகூருக்குச் சென்ற நாத முனிகள், "நம்மாழ்வாரைத் தவிர இறைவனையும் நாடேன்'' என்று குருபாய நிட்டையில் சிறந்து விளங்கிய மதுரகவி ஆழ்வாரின், நம்மாழ்வாரையும், அவர் தம் அருளிச் செயல்களையும் வெளிப்படுத்தி பிரபலப்படுத்தியவரின் பரம்பரையில் வந்த 'பராங்குசரை' பார்த்தார்.

அவர் ஓர் இனிய வழியைச் சொன்னார்.

"திருவாய்மொழியும், மற்ற பிரபந்தங்களும் நீண்ட காலம் முன்பே மறைந்து தான் விட்டன. ஆனால், அவற்றை முழுவதுமாக மீண்டும் பெற வழி உண்டு. நம்மாழ்வாரின் சீடர் மதுரகவிகளின் 'கண்ணிநுண் சிறுதாம்பு' பாசுரத்தைப் பன்னீராயிரம் தடவை உருச் செய்தால், ஆழ்வாரே முன்னே பிரசன்னமாவார். ஆழ்வார் திருஉரு முன்னே நியமத்துடன் ஒரே மனமாக ஜெபிக்க வேண்டும். இதை மதுரகவியே கூறி அதைத் தந்துள்ளார்," என்றார்.

அதைப் பெற்றுக் கொண்ட நாத முனிகள் அப்படியே ஆழ்வார் கோயிலில் இருந்து உருப் போட்டார்.

**ஆழ்வார் உபதேசம்:**

'கண்ணிநுண் சிறுத்தாம்பு' பாசுரத்தைப் பராங்குச தாசரிடம் உபதேசம் பெற்று உருவேற்றிய நாதமுனிகளின் முன் நம்மாழ்வார்

தோன்றினார்.

''திருவாய்மொழி முதலான திவ்யப் பிரபந்தங்களை அடியேனுக்கு இரங்கி, அருளிச் செய்ய வேண்டும்,'' என்று நாதமுனிகள் விண்ணப்பித்தார். ஆழ்வாரும் அவருக்கு 'மயர்வற மதிநலமளித்து ரஹஸ்யத்ரயம், திருவாய்மொழி முதலிய திவ்யப் பிரபந்தங் களையும் அளித்தருளினார். அவற்றின் பொருளுடன் அஷ்டங்க யோக ரகசியத்தையும் உபதேசித்தார்.

"பொலிக, பொலிக" எனும் பாசுர உபதேச சமயத்தில் 'கலியும் கெடும் கண்டு கொண்மின்' எனும் நான் கூறும் வரி உண்மையாகும்படி, ஓராச்சார்யன் அவதரிப்பான்,'' என்றார். ''அவரைச் சேவிக்க விருப்பம்'' என்று நாதமுனிகள் கூற, இராமாநுஜர் போல ஆழ்வார் சேவை சாதித்தார். "இவரை எப்போதும் சேவிக்க வேணும்'' என்று நாதமுனிகள் கூற, ஒரு சிற்பியின் கனவில் போய் இராமாநுஜர் வடிவைக் காட்டி, "இதுபோல் ஒரு விக்ரஹம் செய்து நாதமுனிகளிடம் தரச் சொன்னார். அதன்படி பின்னால் அவதரிக்கப் போகும் ஆதிசேஷன் அம்சமான உடையவரை பவிஷ்யதாசார்யராக விக்ரஹ உருவில் நாதமுனிகள் பெற்றார்.

சில காலம் ஆழ்வார் திருநகரியில் இருந்த அவரை மீண்டும் இராஜமன்னார் பெருமாள் மன்னார்குடிக்கு அழைத்தார். நாதமுனிகளும் ஆழ்வாரிடம் விடை பெற்றுப் போனார்.

### அரையர் சேவை, நூல்கள்:

இவருக்கு இரண்டு மருமகன்கள். மேலை, கீழையகத்தாழ்வான்கள் என்பன திருப்பெயர்கள். தேவ கானத்தில் திவ்யப் பிரபந்தத்திற்கு ராகம், தாளம் அமைத்து அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து இயலும் இசையுமாக்கிப் பாடிப் பரப்பச் செய்தார். விஷ்ணு கோயில்களில் அரையர்களின் சேவை தொடங்கியது. இதனால் திவ்யப் பிரபந்தங்கள் திரும்பவும் மறையாதபடிச் செய்தார். திருமங்கையாழ்வாரும் அருளிச் செயல் பிரபந்தத் திருநாளை உண்டாக்கியிருந்தார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் பெரும் யோகி. இவர் எழுதிய நூல்கள் 'யோக ரகசியம்,' 'புருஷ நிர்யணம்' என்று பெரிய திருமுடியடைவு தெரிவிக்கிறது. 'நியாயத் தத்துவம்' எனும் நூல், ச்ருதப் பிரகாசிகர், எம்பெருமானார், வேதாந்த தேசிகர் ஆகியோரால் எடுத்துக் காட்டப்பட்டது. இவை இப்போது கிடைப்பதில்லை.

### சீடர்கள்:

புண்டரீகாட்சர் (இவரே பிறகு உய்யக் கொண்டாரானார்.) குருகைக் காவலப்பன் ஆகிய இருவர் சீடர்கள் ஆவார்.

"எம்மிடம் ஆழ்வாரருளிய பிரபந்தம், யோக வித்தை இரண்டுண்டு. உமக்கு எது வேண்டும்?" எனத் தம் இரு சீடரையுமே நாதமுனிகள் கேட்டார்.

''யோக வித்தையால் ஒருவரே உயர்ந்து போகலாம்," என்ற குருகைக் காவலப்பன் "பக்தி யோக வித்தையே போதும்" என்று பெற்றுப் போனார்.

உய்யக் கொண்டாரோ, ''பிணம் கிடக்க மணம் புரிவாரோ?'' மக்கள் ஞானத்தில் இறந்தவராயிருக்க நான் மட்டும் யோகம் செய்து உய்யவோ? வேண்டாம்; திவ்யப் பிரபந்தமும், அதன் அர்த்தமுமே தேவை," எனப் பெற்றார்.

உலகம் உய்ய பிரபந்தத்தைப் பெற்றதால், 'உய்யக்கொண்டார்' என நாதமுனிகளாலேயே கொண்டாடப் பெற்றார். அவரிடமே பவிஷ்யதாசார்ய (இராமநுஜ துறவிக் கோல) விக்ரஹத்தை ஒப்படைத்துத் தம் திருப்பேரரிடம் ஒப்படைக்க ஆணையிட்டார். உய்யக் கொண்டாரின் இறுதிக் காலம் வரை ஸ்ரீ ஆளவந்தார் பிறக்காததால், அவர், தம் சீடர் மணக்கால் நம்பிடம் அதை அளித்து வைத்தார். அவர் ஸ்ரீநாத முனிகளின் திருப்பேரர் ஸ்ரீ ஆளவந்தாரிடம் ஆசார்யராகி அப்படியே செய்தார். அவரருளாலே ஸ்ரீஆளவந்தாரே வைணவத்தில் பரமாசார்யர் ஆனார்.

### பரமபதித்தார்:

ஸ்ரீமந் நாத முனிகள், தம் பெண், யாரோ இரு குறவர், ஒரு குறத்தி, ஒரு குரங்குடன் தம்மைத்தேடி வந்ததாகச் சொல்லவே அவர்கள், ஸ்ரீராமனும், இலக்குவனும், சீதையும், அனுமனும் என்றே கருதி அவர்களைத் தேடிக் கொண்டே சென்று விட்டார். குருகைக் காவலப்பன் கோயிலிலே பரமபதித்தார். தாது வருடம் கி.பி.917 மாசி மாதம், சுக்லபட்சம் ஏகாதசி பரமபதித்தார். ஏறத்தாழ 93 ஆண்டுகள் வாழ்ந்து சாதனை பல புரிந்தார்.

இவராலேயே ஆழ்வாரருளிச் செயல்களும், பிற திவ்யப்பிரபந்தங்களும் நமக்குக் கிடைத்து அதன் மூலம் ஸ்ரீவைணவமும் தழைத்துள்ளது. இராப்பத்து, பகல்பத்து திருநாட்களும் நடந்து வருகின்றன.

***ஸ்ரீமந் நாதமுனிகளின் திருவடிகளே சரணம்.***

**ப**ல்லவர்களின் கலைச் சிறப்பை உலகுக்கு எடுத்துக்கூறும் இடமாக, தொண்டை மண்டலம் திகழ்கிறது. அவர்களுடைய கட்டடக்கலை, ஓவியக் கலை, சிற்பக்கலை என அனைத்து அம்சங்களையும் இப்பகுதியில் பரவலாகக் காண்கிறோம். இத்தகு பல்லவ கலைச் செல்வங்களில் ஒன்றான வீரட்டானேஸ்வரர் திருக்கோயில், முருகப் பெருமானின் அறுபடை வீடுகளுள் ஒன்றான திருத்தணி நகரில் அமைந்துள்ளது. இது பல்லவர்கால ஆட்சியின் இறுதியில் ஆண்ட அபராஜிதவர்மன் காலத்தியது ஆகும்.

இக்கோயில் முழுமையுமே கலைப் பொக்கிஷமாக திகழ்கிறது. அபராஜிதவர்ம பல்லவன் எடுத்த கற்கோயில் இது ஒன்றேயாகும்.

**அபராஜித வர்மன்**

பல்லவ மன்னர்களின் இறுதிக்கால மன்னனாக ஆட்சி செய்தவன் அபராஜித வர்மன்; இவன் அபராஜித விக்கிரம வர்மன் என்றும் அழைக்கப்பட்டான். இவனது ஆட்சிக் காலம் கி.பி.885 முதல் கி.பி.903 வரை ஆகும். சோழ பாண்டிய மன்னர்களின் ஆதரவால் ஆட்சியில் அமர்ந்தவன், நென்மேலி வைகுந்தவாசப் பெருமாள் கோயிலுக்கும், நம்பி அப்பு தலைமையில் திருத்தணி வீரட்டானேஸ்வரர் கோயிலுக்கும் இவன் ஆற்றிய பணிகளைப் பற்றி மாங்காடு வெள்ளீஸ்வரர் கோயில், உத்திரமேரூர், திருக்கழுக்குன்றம் ஆகிய ஊர்களில் காணப்படும் கல்வெட்டுக் களில் காண்கிறோம்.

தேவ கோட்டங்களில் கணபதி, தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மன், துர்க்கை



ஆகியோரையும் பிரகாரத்தில் சப்தமாதர் சிற்பங்களையும் வழிபாட்டுக்காக அமைக்கும் பாணி இவனது காலத்தில் உருவாக்கப் பட்டது என்கின்றனர்.

**தொன்மைச் சிறப்பு**

தணிகை வீரட்டேசுவரர் ஆலயத்தின் தென்சுவரில் காணப்படும் கல்வெட்டின் மூலம் (கி.பி.913) நம்பி அப்பி என்பவன் மூலம் அபராஜிந்த வர்மனால் இவ்வாலயம் கட்டப்பட்டதையும், திருப்பணி மற்றும் பூசனைக்காக கொடை அளிக்கப்பட்டதையும் அறிய முடிகிறது. இதே பகுதியில் காணப்படும் மற்றொரு கல்வெட்டில் இறைவன் பெயர் செஞ்சடை ஈசர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் இங்குள்ள கல்வெட்டுக்கள் மூலம் முதலாம் பராந்தகச் சோழன் (கி.பி.907), உத்தம சோழன் (கி.பி.986), இராஜகேசரி வர்மன் (கி.பி.1013), முதலாம் இராஜராஜன் (கி.பி.985), முதலாம் இராஜேந்திரன் (கி.பி.1022), முதலாம் இராஜாதிராஜன் (கி.பி.1049), விக்கிரம சோழன் (கி.பி.1129), விஜயகண்ட

# குடுமியுடன் காட்சி தரும் திருத்தணி வீரட்டானேசுவரர்

கோபாலதேவன் (கி.பி.1263), மாறவர்மன் (கி.பி.1298) என பல்வேறு மன்னர்கள் இந்த சிவாலயத்திற்கும், நந்தியாற்றின் வடகரையில் உள்ள கோட்டா ஆறுமுக சுவாமி திருக்கோயில் மற்றும் விஜயராகவ பெருமாள் ஆலயங்களுக்கும், திருப்பணி செய்து கொடையளித்த விவரங் களையும் அறிய முடிகிறது.



அபராஜிதவர்மனின் பதினெட்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டின் மூலம் (கி.பி.903) நம்பி அப்பி என்பவரால் இக்கோயில் கற்றளியாக அமைக்கப்பட்டதை அறிகிறோம். இச்செய்தி

"திருந்து திருத்தணியற் செஞ்சடையீசற்குக்
கருங்கல்லாற் கற்றளியா நிற்க – விரும்பியே
நற்கலைக ளெல்லா நவின்ற சீர் நம்பியப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து"


என்னும் பாடலாகக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

**ஆலய அமைப்பு**

நந்தியாற்றங்கரையில் அமைந்துள்ள இத்திருக்கோயில், முழுமையுமே கருங்கற்களால் அமைக்கப் பெற்றுள்ளது. அதிஷ்டானம் முதல் பிரஸ்தரம் வரை சதுரமாகவும், அதன் மேலுள்ள கிரீவம் மற்றும் சிகரம் தூங்கானை வடிவத்திலும் அமைக்கப்பட்டுள்ளது.

மகா மண்டபம், திருச்சுற்று, கோபுர வாயில் ஆகிய பகுதிகள் விஜயநகர மன்னர்கள் காலத்திலும், அதன் பிறகும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. வடக்கு நோக்கியவாறு உள்ள எளிய வாசலில் நுழைந்ததும், வலதுபுறம் சிவபெருமானை நோக்கியபடி நந்திதேவர் காட்சி தருகின்றார். கருவறைச் சுற்றில் முறையே விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரம்மா, துர்க்கை ஆகிய திருவுருவங்கள் அழகிய கலைநயத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. பிரம்மாவின் கண் இமைகள் நம்மைப் பார்ப்பது போன்ற அமைப்பில் அமைந்துள்ளது கண்டு மகிழத் தக்கதாகும். துர்க்கையின் எதிரில் சண்டிகேஸ்வரர் சன்னதி அமைந்துள்ளது. கூரைப் பகுதியானது பூதவரி, கபோதவரி, யாளி வரி என்ற மூன்று வரிமானங்களுடன் அமைந்துள்ளது.

கருவறையின் அமைப்பு கஜப்பிருஷ்டம் எனப்படும் தூங்கானை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் பின்புற மேல்தளத்தில் இரண்டு கல் நந்திகள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. சிகரத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்த மாடத்தில் இறைவனும், இறைவியும் வெகு நேர்த்தியாக காட்சி தருகின்றனர். கிழக்கு நோக்கிய வாயில் வழியாக உட்சென்றதும், கருவறை முகமண்டபத்தில் இடதுபுறம் விநாயகர், சப்தமாதர்கள், வீரபத்திரர் ஆகிய திருவுருவங்களைக் காண முடிகிறது. கணபதி சிற்பம் மட்டும் அர்த்த மண்டபத்தில் அமைந்துள்ளது. இச்சிற்பங்கள் யாவும் அருகிலுள்ள தக்கோலத்திலுள்ள ஆலய சிற்பங்களை ஒத்து அமைந்துள்ளன.



சப்தமாதர்களான பிராமி அன்னத்தையும், மாகேஸ்வரி காளையையும் கௌமாரி மயிலையும், வைஷ்ணவி கருடனையும், வராகி சிம்மத்தையும், இந்திராணி யானையையும், சாமுண்டா பிரேதத்தையும் வாகனங்களாகப் பெற்றுள்ளனர். பொதுவாக பல்லவர் காலச் சிற்பங்களில் இவை காணப்படுவதில்லை.

ஆனால், சாளுக்கியர்களின் சிற்பக் கலையில் இவை காணப்படுவதால், இவை சாளுக்கியர் படைப்பு என்கின்றனர்.

சப்த மாதர்களின் எதிர்புறத்தில் அன்னையின் சந்நிதி அமைந்துள்ளது. அன்னையின் பெயர் பிரஹன்நாயகி ஆகும். அன்னை எழிலான கோலத்தில் சிறிய வடிவில் தெற்கு முகமாய்க் காட்சி தருகின்றாள்.



**குடுமியுடன் வீரட்டானேஸ்வரர்**

கிழக்கு நோக்கிய கருவறையில் மூலவராக வீரட்டானேஸ்வரர் சதுர வடிவ ஆவுடையாருடன் காட்சி தருகின்றார். இவரது சிவலிங்கத் திருமேனியின் பின்புறம் குடுமி போன்ற அமைப்பு காணப்படுகிறது. இதை உற்று நோக்கும்போது குடுமி முடிந்த கோலத்தில் உள்ளது. இதற்கான ஐதீகம் தெரியவில்லை என்றாலும், இது ஓர் அபூர்வ கோலம் என்பது குறிப்பிடத்தக்கது.

**கோட்டா ஆறுமுக சுவாமியும், விஜயராகவப் பெருமாளும்**

நந்தியாற்றின் வடகரையில் கோட்டா ஆறுமுகசுவாமி திருக்கோயிலும், விஜயராகவப் பெருமாள் திருக்கோயிலும் அமைந்துள்ளன. இவை இரண்டுமே பழமை வாய்ந்த ஆலயங்களாகும்.

கோட்டா ஆறுமுக சுவாமி திருக்கோயிலை ஆதி முருகன் கோயில் என இவ்வூர் மக்கள் குறிப்பிடுகின்றனர். இன்றும் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி ஆலய அர்ச்சகர்கள் இங்கு வந்து காலசந்தி பூஜையை முடித்து விட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். மூலவர் முருகப் பெருமான் வள்ளி தெய்வானையுடன் எழிலுடன் காட்சி தருகின்றார். அவருக்கு எதிரில் மயில் வாகனத்திற்குப் பதிலாக யானை வாகனம் உள்ளது.

இவ்வாலயத்தின் வலதுபுறம் விஜயராகவப் பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது. மூலவர் விஜயராகவப் பெருமாளும், ஸ்ரீதேவி பூதேவியும் மிகவும் பெரியவடிவில் எழிலுடன் காட்சி தருகின்றனர். விஜயலட்சுமி தாயார் சந்நிதி தனியே அமைந்துள்ளது. தாயாரின் உருவமும் பெரியதாக எழிலுடன் அமைந்துள்ளது. பெருமாள் ஆலயத்தின் எதிரில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. அதன் இடதுபுறம் விநாயகர் சந்நிதி கிழக்கு முகமாய் இருக்கிறது.

வீரட்டனேஸ்வரர், கோட்டா ஆறுமுக சுவாமி மற்றும் விஜயராகவ பெருமாள் ஆகிய மூன்று ஆலயங்களுமே மிகவும் தொன்மை வாய்ந்தவைகளாகத் திகழ்கின்றன.

இவற்றின் நிர்வாகம் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலால் நேரடியாக நடத்தப்படுகின்றது.

**தரிசன நேரம்**

இத்திருக்கோயில் பக்தர்களின் தரிசனத்திற்காக காலை 6.00 மணி முதல் முற்பகல் 10.30 வரையிலும், மாலை 4.30 மணி முதல் மாலை 6.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

**அமைவிடம்**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டத்தில், திருத்தணி நகரின் எல்லையில் நந்தியாற்றங்கரையின் தென்பகுதியில் வீரட்டானேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது.

சென்னையிலிருந்து வடமேற்கு சுமார் 100 கி.மீ., தொலைவில் திருத்தணி அமைந்துள்ளது. இவ்வூருக்கு பேருந்து மற்றும் இரயில் வசதிகள் அதிக அளவில் உள்ளன. சென்னை – திருத்தணி புறவழிச் (By pass) சாலையில் திருத்தணிக்கு முன்பாக ஆர்.டி.ஓ., அலுவலக நிறுத்தத்தில் இறங்கி, இருளர் காலனி வழியாகச் சென்றால் வெகு எளிதில் இவ்வாலயத்தை அடையலாம்.

**கட்டுரை, படங்கள்:**
**பனையபுரம் அதியமான்.**



## சர்வக்ஞர் போற்றும்

# சிவனார் அமுது...

**கலைமாமணி டாக்டர் வேலூர் ம.நாராயணன் எம்.ஏ., பி.எச்.டி.,**

இன்றைக்கு ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்பு கர்நாடகத்தில் வாழ்ந்த சிவ பக்தர், சித்தர், கவிஞர், சீர்திருத்த அறிஞர் சர்வக்ஞர். பசவரசர் – மாலி என்னும் பெற்றோர்க்குப் பிறந்த இவரது ஊர் கர்நாடகம் தார்வாடு நகரின் அருகேயுள்ள அம்பலூரு ஆகும். சிறந்த ஆன்மிகக் குடும்பத்தில் பிறந்த இவர்க்கு இயல்பாகவே சிவ பக்தி வாய்த்திருந்தது என்றாலும் சாதி – மதங்களைக் கடிதல், மது – மாது ஆகியவற்றில் மூழ்கியிருப்பவர்களை நல்வழிபடுத்துதல் போன்ற தொண்டுகளையும் இவர் புரிந்துள்ளார்.

சர்வக்ஞரின் பாடல்கள் மூன்று வரிகள் கொண்டவை. அவற்றைத் திரிபதிகள் என்கின்றனர். தமிழில் சிந்தர் பாடல்களுக்கு நிகராக அவற்றைக் கொள்ளலாம். ஒவ்வொரு பாடலின் ஈற்றுச் சீரும் 'சர்வக்ஞ' என முடியும். தெலுங்கில் வேமன்னா, தமிழில் திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார் போன்றோர் தங்கள் பாடல்களில் தங்கள் பெயர் வருமாறு பாடும் முறையைப் பின்பற்றியுள்ளனர். சர்வக்ஞரின் திரிபதிகள், அதாவது உரைப்பாக்கள் **1198** இன்று நமக்குக் கிடைத்துள்ளன.

அண்மையில் 13.08.2009ஆம் நாளில் சர்வக்ஞரின் திருவுருவச் சிலையை சென்னை பெரம்பூரில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் தலைமையில் மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. எடியூரப்பா அவர்கள் திறந்து வைத்தார்கள். இஃதொரு சிறந்த, இனிய வரலாற்று நிகழ்வாகும்.

முன்னதாக 09.08.2009 ஆம்நாளில் பெங்களூருவில் வான்புகழும் நம்

திருவள்ளுவரின் திருவுருவச் சிலை மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. எடியூரப்பா தலைமையில் மாண்புமிகு நம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. இதன்மூலம் கர்நாடக வாழ் தமிழர்களின் கால் நூற்றாண்டுக் காலக் கனவு இனிதே நிறைவேறியது.

தென் மாநிலங்களில் வீர சைவம் பெரிதும் போற்றப்பட்ட, பின்பற்றப்பட்ட மாநிலம் கர்நாடகம்; சர்வக்ஞரும் அதைப் பின்பற்றியுள்ளார். ஒல்லும் வகையான், இலிங்க வழிபாட்டையும், சிவபெருமானையும் தமது பாடல்கள் வழிப் போற்றித் துதித்துள்ளார்; அவற்றை இங்கு ஆராய்வோம்.

'இலிங்கமே அனைத்தும்' என வாழ்ந்திருக் கின்றார் சர்வக்ஞர்; 'சர்வக்ஞர்' என்ற சொல்லுக்கு 'அனைத்தும் அறிந்த இறைவன்' என்பது பொருள். வீர சைவர்கள் லிங்கத்தைக் கழுத்தில் அணிந்திருப்பர். சர்வக்ஞரும் இம்மரபைப் போற்றியுள்ளார்.

***இலிங்கம் தரித்தோன்**
**உயிர்தரித்தோனாம்**
**மேன்மை உடைத்தோனாம்**
**உலகின்பம் துய்ப்பவனு மவனாம் – பிறப்பெடுப்பதுவும்**
**இலிங்கம் வழியாம் சர்வக்ஞ (87)**

தாம் அனுபவிக்கும் உலகியல் பொருள்கள் அனைத்தையும் சிவனுக்கென்று படைப்பவரே மேன்மேலும் மேன்மை எய்துவர் என்பது சர்வக்ஞர் கருத்து.

*** துய்க்கும் பொருள் துய்த்து – உலகில்**
**துய்ப்பதைச் சிவனுக்கு அன்போடு படைப்பவரே**
**எய்துவர் மேன்மை சர்வக்ஞ. (101)**

எல்லாம் சிவனருள் என நம்பி வாழ்பவர்க்கு மறு பிறப்பு இல்லை என்கிறார் பிறிதொரு பாடலில்;

*** சிவனே கணவன்; தானே மனைவியென**
**சிவனுள் கூடாமல் கூடும் சிவனடியார்க்கு**
**எவனுண்டு மறுபிறப்பு சர்வக்ஞ. (108).**

இஃது, நம் தமிழ் மரபில் உள்ள நாயக நாயகி பாவத்தை ஒத்துள்ளது எனலாம். தொடர்ந்து பாடுகின்றார்.

*** இலிங்கமே காட்சியாம்; இலிங்கமே நிலையாம்**
**இலிங்கமே அனைத்தின்பமாம் என்போர்**
**இலிங்கமே ஆவர் சர்வக்ஞ. (114)**

இலிங்கம் தன்னுள்ளே உறைகிறது என்ற உணர்வு தெளியாமல் பலரும் சிவனருள் வேண்டிக் கங்கை போன்ற நதிகளைத் தேடிச் சென்று மூழ்குவதேனோ' என்கின்றார்.

*** தன்னுள் உறைகின்ற இலிங்கமதை மறந்தே**
**தண்கங்கை கோதாவரி காவிரி யமுனையில் தான் மூழ்கின் பயனென் சர்வக்ஞ. (131).**

மும்மூர்த்திகளில் சிவனே உயர்ந்தவர்; சிறந்தவர் என்பதில் உறுதியாக இருந்துள்ளார் சர்வக்ஞர்.

*** பிரம்மனும் அரியும் அரனின் படைப்பே**
**அரசர்க்குக் குடியும் இணையோ? – யாருளார்**
**அரனினும் உயர்ந்தவர் சர்வக்ஞ. (157)**

சர்வக்ஞரின் காலத்தில் தமிழ்நாட்டைப் போலவே, கர்நாடகத்திலும் பல தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடுகள் ஆதிக்க நிலையில் இருந்துள்ளன போலும்; அதனால் தான் மனம் நொந்து இவ்வாறு பாடுகிறார்:

*** நிலம் நீரிருக்க நீள்துயிலும் கொள்ளுவரோ?**
**நிலமீது சிவனிருக்க பிற தெய்வம் நம்பு வோர்**
**நிலமீது மூடரே காண் சர்வக்ஞ. (160)**

*** கரவினும் களவில்லை கேள்வியிலும் வலிமையில்லை**
**எரிகதிரினும் ஒளியில்லை பற்பல தெய்வங்கள்**
**பரமனுக் கிணையில்லை சர்வக்ஞ. (161)**

பிறர்க்குப் பயன்படும் வண்ணமாகத் தம்மிடம் உள்ள பொருள்களை மறைத்து வாழ்வது திருட்டிற்கு ஒப்பாகும்; நமக்குத் தெரியாதவற்றைக் கேட்டுத் தெளிதல் சிறந்த பலமாகும்; ஒளி வெள்ளம் பாய்ச்சுவதில் சூரியனே சிறந்ததாகும். என்றெல்லாம் உவமைகளை அழகுற அடுக்கி நிறைவாக

இவ்வுலகில் தெய்வங்களெல்லாம் சிறந்த தெய்வம் சிவனே – பரமனே என்று சர்வக்ஞர் கூறுவது அவர் போற்றும் சிவனார் அமுது சிறப்புடைத்து என்பதைக் காட்டுகிறது.

கவிதைகள் சிறக்க ஒன்பது மெய்ப்பாடுகள் தேவை: காதுகட்குச் சிறந்த இனிமையான இசை தேவை; பந்த பாசங்களில் மூழ்கித் தத்தளிப்பவர்களுக்குக் குருவின் வழிகாட்டுதல் தேவை. உயிர்க் குலங்கள் அனைத்தும் வீடு பேறு பெறச் சிவமந்திரமே தேவை' என்கிறார் சர்வக்ஞர்.

*** கவிக்கு ஒன்பான் சுவைநன்று செவிக்கு இசை நன்று**

**தவிப்போர்க்கு பந்தமகற்றும் குரு நன்று – வீடு பெற**

**சிவமந்திரம் நன்றாம் சர்வக்ஞ. (211)**

மற்ற எவற்றை அறிதலையும் விடவும் தாம் போற்றுகின்ற சிவனை அறிதல் சிறப்புடைத்தாம் என்கிறார் சர்வக்ஞர்.

*** ஏற்ற நாற்று உழவுக்கழகு தோட்டத்துக்கழகு மல்லிகை**

**கற்ற பெரியார் நட்பழகு சிவனையறிதல்**

**மற்றவற்றினும் சிறப்பாம் சர்வக்ஞ. (222)**

தேவாரம் பாடிய மூவருள் மூத்தவர்; முதியவர்; எண்பது வயது வரை மண்ணில் வாழ்ந்து சிவத்தலங்கள் தோறும் சென்று சிவனைக் கண்டு பாடிப் பரவியவர் திருநாவுக்கரசர். தமது அருட்பார்வையில் சிவபெருமான்,

**'விறகில் தீயினன்; பாலில் படுநெய் போல்**

**மறைய நின்றுளன்; மாமணிச் சோதியான்...'**

எனத் திகழ்கின்றான் என்று அருமையாகப் பாடியுள்ளார் திருநாவுக்கரசர். இதே கருத்து நம் சர்வக்ஞருக்கும் தோன்றியுள்ளது; இவர்

*** நீருள் வெப்பமும்; பாலுள் நெய்யும்**

**பாருள்ளோர் கண்ணில் படாத தன்ன – சிவனும்**

**மறைய நின்றுளான் சர்வக்ஞ. (228)**

என்று பாடியுள்ளார்.

உயர்ந்த உள்ளங்கள் ஒன்று போலவே சிந்திக்கும்' என்பது இயற்கையின் நியதி அல்லவா?

தமது திரிபதியில் 'சிவயோகம்' எனும் பகுதியில் சிறந்த சிவயோகிகளின் இலக்கணத்தையும், சிவயோகிகளை நிந்திப்பவர்க்கு நேரும் கேடுகளையும் பாடியுள்ளார் சர்வக்ஞர்:

சான்றாகச் சில பாடல்கள் பார்ப்போம்: சிவயோகியின் இலக்கணம்:

*** தோள் வலிமையேன்? பொன்னுமேன்? மென்**

**தோளுடை பெண் துணையுமேன்? சிருங்காரமேன்?**

**கோளுறவு துறந்தார்க்கு சர்வக்ஞ. (289)**

மண் – பொன், பெண் எனும் மூவாசைகளைத் துறந்தவர்களே சிறந்த சிவ யோகிகள் என்கிறார் சர்வக்ஞர்.

பொதுவாகச் சிவயோகிகளின் புறத்தோற்றம் வித்தியாசமான கோலத்தில் தான் இருக்கும்; அவற்றைக் கண்டு வெகு மக்கள் அவர்களைக் கேலி பேசுவதோ, நிந்தனை செய்வதோ கூடாது என்கிறார் சர்வக்ஞர்:

*** கடையனென இகழற்க! துறவியைத் தூற்றற்க**

**சடையோனென இகழ்ந்த தட்சன் தலையும்**

**உடைந்த கதையறியாயோ சர்வக்ஞ. (293)**

இங்ஙனம், தாம் போற்றிய வீர சைவத்தின் சிறந்த அடையாளங்களான இலிங்கம் – சிவபெருமான் – சிவயோகியர் ஆகியோர் சர்வக்ஞர் தமது உரைப்பாவில் பாடியிருப்பது இவரது ஏனைய உரைப்பாக்களின் திறனையும் அறிய விரும்பும் வேட்கையை நம்முன் எழுப்புகின்றது அல்லவா? ஆம்! மேன்மேலும் சர்வக்ஞரைப் பயில்வோம்; ஆய்வோம்; அகங் குளிர்வோம்.

*** இக்கட்டுரை உருவாகக் கருவாக அமைந்த நூல்:**

**சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட (2009) 'சர்வக்ஞர் உரைப்பா' : தமிழில்: கவிஞர் இறையடியான்.**

# சாய்ந்த வெண்கொற்றக்குடையும் ஆயிரம் அர்த்தச் சிரிப்பும்

**தீபம். எஸ்.திருமலை.**

தந்தை தசரதரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு இராமர் பதினான்கு வருடம் வனவாசம் சென்றபோது இலட்சுமணனும் அவருடன் சென்றார். காட்டை அடைந்த முதல் நாள் இரவு அவனுக்குத் தூக்கம் வந்தது. அதை அடக்க விரும்பியவராக நித்ராதேவியை அழைத்தான். ''நான் இராமருக்கு பணிவிடை செய்வதற்காக வந்திருக்கிறேன். நான் தூங்க மாட்டேன். ஆகவே, இந்தப் பதினான்கு வருடமும் நீ என்னை நெருங்கக் கூடாது," என்று கேட்டுக் கொண்டான்.

அதற்குச் சம்மதித்த நித்ராதேவி, "பதினான்கு வருடம் முடிந்த பின் நான் விரும்பும் எந்த நேரத்திலும் உன்னை வந்து அணுகுவேன். சம்மதமா?" என்று கேட்க, இலக்குவனும் சம்மதித்தான்.

பதினான்கு வருடம் கழித்து அயோத்திக்குத் திரும்பி பட்டாபிஷேகத்துக்காக இராமர் சிம்மாசனத்தில் அமர, இலட்சுமணன் வெண்கொற்றக்குடை பிடித்து நின்றான். இதுவே அவனை மடக்கச் சரியான சமயம் என்று நினைத்த நித்ராதேவி (குறும்புக்காரி) இலட்சுமணனை நெருங்கினாள். ''சரி தான் போ! இப்போது பார்த்து வருகிறாளே!" என்று

இலட்சுமணன் நினைத்தான். சிரிப்பு வந்து விட்டது. வாய் விட்டுச் சிரித்தும் விட்டான்.

இலட்சுமணன் சிரித்தது ஏன் என்று யாருக்கும் புரியவில்லை. ஒவ்வொரு வரும் ஒவ்வொருவிதமாக எண்ணிக் கொண்டார்கள்.

'நாள், நட்சத்திரம் பார்த்து பட்டாபிஷேகத்துக்கு முகூர்த்தம் குறித்துத் தந்தீர்கள். அது நின்று போய் பதினான்கு வருடம் கழித்து இன்று நடக்கிறது பாருங்கள்' என்றுதான் தன்னை ஓரக்கண்ணால் பார்த்து இலட்சுமணன் சிரிக்கிறான் என்று வசிஷ்டர் எண்ணிக் கொண்டார்.

உன் மகனை இந்த சிம்மாசனத்தில் உட்கார வைக்க நினைத்து என் தமையனைக் காட்டுக்கு விரட்டினாயே! நடந்ததா?' என்று தன்னைப் பார்த்துத் தான் சிரிக்கிறான் என்று கையேயி நினைத்துக் கொண்டாள்.

"தமையனைப் பத்திரமாகப் பாதுகாத்து அழைத்து வந்து விட்டேன். பார்த்தீர்களா?" என்று தங்களைப் பார்த்து மகிழ்வுடன் சிரிக்கிறான் எனக் கோசலையும், சுபத்திரையும் நினைத்துக் கொண்டார்கள்.

"இந்தப் பதினான்கு வருடங்களில் ஒரு நாள் கூட உண்டாயா, உறங்கினாயா என்று இவனை நான் கேட்டதில்லை. அந்தச் சுயநலத்தை எண்ணி சிரிக்கிறானோ?' என்று ஸ்ரீராமன் எண்ணிக் கொண்டான்.

பெண்மானின் பின்னே கணவர் போனபோது அவரைத் தேடிப் போகும்படி இவனைச் சுடுசொற்களால் திட்டினேனே, அந்தக் கோபச் சிரிப்புதான் இது," என்று சீதை நினைத்தாள்.

அந்த வைபவத்தின்போது இலக்குவன் நித்திராதேவிக்கு ஆட்பட்டு விட்டான். தூக்க கலக்கத்தால் அவன் பிடித்த குடை சற்றே சாய்ந்ததாம்.

இன்று கூட வங்காளத்தில் வெளியாகும் பட்டாபிஷேகப் படங்களில் வெண்கொற்றக்குடை சாய்ந்த மாதிரிதான் காணப்படுகிறதாம்.






# மயிலாப்பூர், அருள்மிகு முண்டகக் கண்ணி அம்மன் திருக்கோயில் அன்னதானக் கூடம் - திறப்பு விழா (10.06.2010)

**செ**ன்னை மயிலாப்பூர் அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக் கோயிலில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயர்த்தி திருமதி எழிலரசி, அவர் கணவர் டாக்டர் வி.எம்.ஜோதிமணி குடும்பத்தினர், கரந்தை கப்பல் திரு.முருகேசன் செட்டியார் திருமதி மு.ஜானகியம்மாள் நினைவாக, ரூபாய் 13 இலட்சம் மதிப்பீட்டில் அன்னதானக் கூடத்தை நன்கொடையாகக் கட்டித் தந்தனர்.

மேற்படி அன்னதானக் கூடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் மனைவி திருமதி.தயாளு அம்மையார், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் 10.06.2010 அன்று குத்து விளக்கேற்றி திறந்து வைத்தனர்.

விழாவில் மாண்புமிகு முதலமைச்சரின் மகள் திருமதி. செல்வி செல்வம், திருமதி சாந்தா ஸ்டாலின், திருமதி காவேரி கலாநிதி, திருமதி பிரியா தயாநிதி, திருமதி செல்வியின் மகள் திருமதி எழிலரசி, அவர் கணவர் டாக்டர் வி.எம். ஜோதிமணி, திருமதி கயல்விழி, அவர் கணவர் திரு.வெங்கடேசன், திருமதி செல்வியின் பெயர்த்தி ஓவியா மற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர் பெரிய கருப்பன், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தித்துறை– அரசு முதன்மைச் செயலாளர் திரு.க. முத்துசாமி இ.ஆ.ப,இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் இ.ஆ.ப மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.வி.சேகர், மற்றும் அறநிலையத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர்க் குழுத் தலைவர் திரு.எல். உதயகுமார் உள்ளிட்ட அறங்காவலர்களும், செயல் அலுவலர் திரு.த.மோகனசுந்தரமும் சிறப்பாகச் செய்திருந்தனர்.



நன்கொடையாளருக்கு நினைவுப் பரிசு வழங்கல்

# மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திருவந்திபுரம் திருக்கோயிலுக்கு ரூ.1 கோடி நன்கொடை



அதன்படி, மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சரின் சார்பில் அம்மாநில இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.இராமண்ண நாயக் அவர்கள் 10.06.2010 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களிடம் ரூ.1கோடி நன்கொடைக்கான வரைவோலையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை முதன்மைச் செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத், இ.ஆ.ப. மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற 108 ஸ்ரீ வைஷ்ணவ திவ்விய தேசங்களில் ஒன்றான கடலூர் மாவட்டம், திருவந்திபுரம் அருள்மிகு தேவநாத சுவாமி திருக்கோயிலுக்கு கடந்த 06.05.2010 அன்று மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு.பி.எஸ்.எடியூரப்பா அவர்கள் வருகை தந்து அருள்மிகு தேவநாத சுவாமி திருக்கோயிலிலும் மலைக்குன்றின்மேல் அமைந்துள்ள அருள்மிகு பரிமுகப் பெருமான் (ஹயக்கீரிவர்) சன்னிதியிலும் வழிபட்டார். அப்போது அத்திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளைக் கண்டறிந்த மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு.பி.எஸ். எடியூரப்பா அவர்கள், அத்திருப்பணிகளுக்காக ஒரு கோடி ரூபாய் நன்கொடை அளிப்பதாக உறுதியளித்தார்.





# திருமண மண்டபங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் –இவ்விரு திருக்கோயில்களின் திருமண மண்டபங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 04.06.2010 அன்று நடந்தது.

விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, முதன்மைச் செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத், இ.ஆ.ப, மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.வி.சேகர், தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.ராஜா மற்றும் அறநிலையத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர்க்குழுத் தலைவர் திரு. நல்லி குப்புசாமி செட்டியார், துணை ஆணையர்/ செயல் அலுவலர் திரு.ரா.செல்வராஜ், திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் அறங்காவலர்க்குழுத் தலைவர் திரு.ந.மாயகிருஷ்ணன், செயல் அலுவலர் நா. பாலசுப்பிரமணியன் ஆகியோர் செய்திருந்தனர்.

சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக இராஜா அண்ணாமலைபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் சாலையில் உள்ள இடத்தில் ரூ 9.20கோடி மதிப்பீட்டில் 55304 சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய திருமண மண்டபமும், திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக திருவான்மியூர் கிழக்குக் கடற்கரை சாலையிலுள்ள இடத்தில் 64150 சதுர அடிப்பரப்பளவில் ரூ 9.23கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய திருமண மண்டபமும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.



மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் - திருமணமண்டப முகப்புத் தோற்றம்



திருவான்மியூர். அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் - திருமணமண்டப முகப்புத் தோற்றம்

# சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்கு- பன்னாட்டு தரச்சான்று (ISO)







திருக்கோயில்களுக்கு தரச்சான்று (ISO) என்பது திருக்கோயில்களின் தூய்மையான பராமரிப்பு, திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகளின் வழிபாட்டிற்கு செய்து வரும் அடிப்படை வசதிகள் மேம்பாடு, திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்கள் பராமரிப்பு, அன்னதானத் திட்டம், கல்வி நிறுவனங்கள், கருணை இல்லம், நூலகம் போன்ற சமூகப் பணிகள், திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட நிதி ஆதாரங்களின் பயன்பாடு. நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகள், மற்றும் எதிர்காலத் திட்டங்கள் ஆகிய திருக்கோயிலின் தொடர்புடைய அனைத்து செயல்பாடுகளையும் ஆய்வு செய்து, வழங்கப்படும் ஒரு சான்றாகும்.

மேற்படி தரச்சான்றிதழ் முதற்கட்டமாக, சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்குச் தரச்சான்று பெற 2009-2010ம் ஆண்டு சட்டமன்ற மானியக் கோரிக்கை அறவிப்புகளில் ஓர் அறிவிப்பாக வெளியிடப் பட்டதற்கிணங்க, சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்கும், வடபழனி, அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயிலுக்கும் மேற்குறித்த திருக்கோயில்களின் துணை ஆணையர்/ செயல் அலுவலர்கள் திரு. பொ.ஜெயராமன், திருமதி. த.காவேரி ஆகியோரிடம் 04.06.2010 அன்று மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற திருமண மண்டப கால்கோள் விழாவின் போது, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரிய கருப்பன் அவர்கள் தரச்சான்றிதழ் களை வழங்கினார்கள்.

# அழகர்கோயில் சோலை மண்டபம் அருள்மிகு முருகன் திருக்கோயில் தங்கத்தேர் வெள்ளோட்ட விழா (27.05.2010)

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அழகர் கோயில் சோலை மண்டபம், அருள்மிகு முருகன் திருக்கோயிலில் 27.05.2010 அன்று தங்கத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் இ.ஆ.ப. இணை ஆணையர்கள் திரு.ஜி.இராஜநாயகம், திரு.அர.சுதர்சன், திருக்கோயிலின் அறங்காவலர்க்குழுத் தலைவர் திரு.வி.ஆர்.வெங்கடாசலம், உள்ளிட்ட அறங்காவலர்கள், துணைஆணையர்/ செயல் அலுவலர் திருமதி எஸ்.கல்யாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.




இறைவனின் படைப்புகளிலேயே மிகப் பெரிய அதிசயமான, அபூர்வமான படைப்பு நம்முடைய மானிடத் தேகந்தான்.

பனித்துளியில் ஒரு பாதி அளவிலான ஜீவ ஜலம், தந்தையினிடமிருந்து வெளியாகி தாயின் கருவறையில் வந்து தங்கிற்று. பிறகு அதுவே பத்துத் திங்களில் அற்புதமான இந்தத் தேகத்தை உருவாக்கி வெளியே வந்தது.

யாரும் கட்ட முடியாத திருமாளிகையே நம் மானிடத் தேகம்.

மனிதன் என்பவன் இந்த உடம்போடு மனம், ஆன்மா என மூன்றும் சேர்ந்த வடிவினன். இந்த உடம்பும், மனமும் மாறக் கூடியவை. ஆனால், ஆன்மா என்றும் அழியாதது, நித்தியமானது.

இந்த உடலுக்கு ஆன்மிக உணர்வு கிடையாது. இதில் இருப்பது புலனின்பந்தான். இந்த உடம்புக்கு இளமை, முதுமை, மரணம் என்றெல்லாம் உண்டு.



எனினும், 'உடம்பு இறைவன் வாழும் நகரம். அது பிரம்மபுரம்' என்கிறது சாந்தோக்கிய உபநிஷதம். 'காயமே கோயிலாக' என்று அப்பர் சுவாமிகளும், 'ஊனுடம்பு ஆலயம்' என்று திருமூலரும் போற்றிப் பாடியுள்ளனர்.

எனவே, இந்த உடம்புதான் இறைவன் உறையும் உண்மையான திருக்கோயிலாகும். இதற்கு ஈடு இணையான கடவுள் வீற்றிருக்கும் க்ஷேத்திரம் உலகில் வேறெங்கும் இல்லை.

மனிதனுக்கு இக வாழ்வானாலும் சரி அல்லது பரவாழ்வானாலும் சரி, நல்ல ஆரோக்கியமான உடம்பு மிகவும் அவசியமாகும்.

அருந்துதல், பொருந்துதல், உறங்குதல் அதாவது உணவு, போகம், உறக்கம் இவை மூன்றிலும் மிதமாக இருத்தலே உடம்பை வளர்க்கும் உபாயங்களாகும்.

இந்த அதிசய, அபூர்வமான உடம்பை முதலில் நேசிக்க வேண்டும். அதோடு மிகவும் நட்பாக இருக்க வேண்டும். அதன் தேவைகளைக் கவனிக்க வேண்டும். ஏனெனில், இந்த உடம்பு தான், வாழ்வின் அஸ்திவாரமாகவும், நம் உயிரின்– ஆன்மாவின் திருக்கோயிலாகவும் விளங்குகிறது.

'முக்தியடைவதற்கு இம்மானிட தேகமே தக்கதாயும், வேறு தேகத்தால் அடைவது அரிதாயும் இருப்பது ஆதலால், எவ்விதத்தால் ஆயினும்

# உடல்-மனம்-ஆன்மா

-தென்னம்பட்டு ஏகாம்பரம்

தேகம் நீடித்திருக்கும்படி பாதுகாத்தல் வேண்டும்' என வள்ளற் பெருமானும் உடம்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.

எனவே, நம் ஆன்மிக யாத்திரையை முதலில் நம் உடம்பிலிருந்து தான் ஆரம்பிக்க வேண்டும்.

**'உடம்பினை முன்னம்**
**இழுக்கென்றிருந்தேன்**
**உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்பினுள்ளே உத்தமன் கோயில்**
**கொண்டான் என்று**
**உடம்பினை யானிருந்து**
**ஓம்புகின்றேனே'**

என்றும்

**'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும்**
**மாட்டார்'**

என்றும், உடம்பாலயத்தைப் போற்றிக் காப்பதின் அவசியத்தைத் திருமூலர் வலியுறுத்திப் பாடியுள்ளார்கள்.

ஆனாலும், இந்த உடம்பை ஆள்வதும், நிர்வகிப்பதும் மனந்தான்.

மனம் பதற்றமடைந்தால், உடம்பு பதற்றமடைகிறது. மனம் சந்தோஷமுற்றால், உடம்பும் அதனை எதிரொலிக்கிறது.

எண்ணங்கள், சிந்தனைகள் இவற்றின் சங்கிலித் தொடரே மனம் என்பதாகும். ஆம். எண்ணங்களின் கோர்வையே மனமாகும்.

மனம் எப்போதும் எதையாவது நினைத்துக் கொண்டு இங்கும் அங்கும் ஓடிக் கொண்டே இருக்கும். நினைப்பது என்றாலே மனம் அலைவதுதான். ஓரிடத்தில் உட்காருவதே இல்லை. உட்காரவும் முடியாது. எப்போதும் வெளியில் செல்லும் தன்மை படைத்ததுதான் மனம்.

இந்த மனத்திற்கு தேகமில்லை. அதனால் 'பேய்' என்றார்கள். அது ஒன்றை விட்டு, இன்னொன்றிற்குத் தாவிக் கொண்டிருக்கும் தன்மையாதலால், நம் பெரியோர்கள் இதனை 'மனக்குரங்கு' என்றார்கள்.

ஆக, நம்மை இயக்குவது மனமே, எல்லாச் செயலுக்கும் கர்த்தாவாக இருப்பது மனமே. மனத்தின் வசப்பட்டவரே மனிதர் ஆவார்.

சுகம் வேண்டும், செல்வம் வேண்டும், மாளிகை வேண்டும் என்றெல்லாம் ஏதாவது ஆசையை எழுப்பி, அலைய வைத்து, கவலையில் ஆழ்த்துவதும் மனம் தான்.

ஆனால், எதை அனுபவித்தாலும், மனம் அடங்குவதில்லை; திருப்தியடைவதில்லை.

காமம், கோபம், விருப்பு, வெறுப்பு, துயரம் ஆகியவற்றிற்கும் இந்த மனந்தான் காரணமாகும்.

நமக்குத் தலைவன், நம்மை நடத்துபவன் நம் மனந்தான். ஆனால், அவன் நம்மை எப்பவும் தீங்கில் தள்ளவே காத்துக் கொண்டிருக்கிறான்.

மனம் என்பது ஆசையேயன்றி வேறொன்றுமில்லை. ஆசையும், மனமும் ஒன்றுதான். புத்தருடைய மொழியில் மனமே ஆசையாகும்.

ஆசைகளிலிருந்து மனதைக் கழட்டுவதற்காகவே, வணக்கம், வழிபாடு, நோன்பு, விரதம், ஆசாரம், அனுஷ்டானம், யாத்திரை முதலானவை எல்லாச் சமயங்களிலும் எடுத்து வைக்கப் பெற்றுள்ளன.

'மனம் எனும் மாடு அடங்கில் முத்தி வாய்க்கும்' என்றனர் நம் சித்தர் முத்தர்கள்.

மனத்திற்குள் மெல்ல மெல்ல மெய்யறிவு உதயங்காட்டி, மனதைப் பிரம்மமாக்கவே, மானுடர்க்காக மகான்கள் காலங்கள் தோறும் அவதரித்து வருகிறார்கள்.

மெய்ஞ்ஞானிகளின் முன்னிலையில் அமர்ந்து, அவர்களின் ஞான சைதன்ய திருவாக்குகளைச் செவிமடுக்கும் போதுதான், அலையும் மனம் அசையாத சைதன்ய அறிவு வடிவமாகிறது.

அறிவுருவமான மெய்க்குருபிரான் உதவியின்றி, எத்திற வல்லபம் கொண்டவரும், மனதை உள்முகமாகத் திருப்பி நிலை நிறுத்த முடியாது; அடக்கி ஆளவும் முடியாது.

பெரியோர்களின் – ஞானிகளின் அமுத அருள் வாக்குதான் – செவியுணவுதான் – மக்களின் மனமாசுகளைக் களைந்து, செம்மைப்படுத்தி, பரிசுத்தமாக்குகிறது. நினைவு, அறிவுப் பிரகாசமாக –அருட் பெருஞ்சோதி ஆக்குகிறது. அந்த நிலைதான் மனதற்ற பரிசுத்த நிலை. அந்த நிலையைக் கைப்பற்றியவரெல்லாம் மண்ணில் வாழும் தேவர்கள் ஆவார்கள்.

உடம்பையும், மனத்தையும், தாண்டி நம்மில் ஆன்மா என்ற ஒன்று உள்ளது.

வாஸ்தவத்தில் நாம் உடம்போ, மனமோ அல்ல; பேரறிவு வடிவமான ஆன்மாதான்.

வாழ்க்கையில் மிக முக்கியமாகக் கற்றுக் கொள்ள வேண்டியது நாம் உடல் அல்ல; மனம் அல்ல; ஆன்மாதான். என்பதையே. உடம்பு என்பது உண்மையில், ஆன்மா போர்த்தியுள்ள மேலாடையே ஆகும்.

நாம் உடலா அல்லது உயிரா எனக் கேட்டால், சரியான பதில் சொல்ல நமக்குத்

தெரியவில்லை. நாம் உடலல்ல. நாம் உயிர்தான்– ஆன்மாதான். நமக்கு வைத்திருக்கும் திருநாமம் உயிருக்குத்தானே தவிர உடலுக்கு அல்ல.

இந்த உடலானது அழியும். ஆனால், நித்தியப் பொருளான உயிர் அழிவதில்லை. பஞ்ச பூதமும் இந்த ஆன்மாவிடமிருந்தே கடன் பெற்று, தேகமாகிய இந்தக் கூட்டைக் கட்டிற்று. சர்வத்திற்கும் ஆன்மாவே தாய்க்குடிலாக இருக்கிறது.

ஆனால், அந்த நித்தியமாகிய ஆன்மா– பேரறிவு வஸ்து– அது எங்கே இருக்கிறது என்றால், இந்த அநித்திய தேகத்தில்தான் இருக்கிறது. நமக்குச் சீரும் சிறப்பும் தருகின்ற உயிர், இரவு பகல் பாராது ஓயாது ஊழியம் செய்து கொண்டிருக்கும் ஆருயிர், நம்மிடத்தில் இருந்தாலும் அது எங்கிருக்கிறது. எப்படி இருக்கிறது என்பது தெரியவில்லை.

அதுதான் நம் சொந்த தேகம். அழியாதது, அநாதியானது. நம் ஊனக் கண்ணுக்கு அறிய முடியாத பொருளாக நமக்குள் அது வைக்கப் பெற்றிருக்கிறது. அதையே ஏகாட்சரம், ஓங்காரம், பஞ்சாட்சரம், சடாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா என சமய நெறிகளில் பேசப் பெற்றுள்ளது. அதைப் பெறவே நாம் வந்தோம்.

சீரும் சிறப்பும் மதிப்பும் புகழும் ஆட்சியும் அழகும் நமக்குக் காலமெல்லாம் தந்து கொண்டிருக்கிருக்கிற உயிரை, ஆன்மாவை அறிய வேண்டாமா?

ஒரு பெரிய அரண்மனைக்குச் சொந்தக் காரரான சக்கரவர்த்தி அரண்மனையின் முற்றத்தில் மட்டுமே வாழ்வதைப் போல, பரம்பொருள் வடிவமான ஆன்மாவின் சொந்தக்காரர்களான நாம், நம் உடம்போடு வாழ்ந்து மடிந்து போகலாமா?

ஆன்மாவை இங்கேயே இப்பொழுதே அறிந்தால்தான், வாழ்க்கையில் உண்மையான நிறைவு ஏற்படும். இல்லா விட்டால் இந்தப் பிறவி, மாபெரும் இழப்பாகும்.

'ஆன்மாவை அறியாதவர்களுக்கு உடல் ஒரு சுமை' என்கிறது மகோபநிஷதம். நடமாடும் பிணம் எனலாம்.

எங்கும் நிறைந்த பரம்பொருளே, நம் இருதயத்தில் ஆன்மாவாக – உயிராக ஒளிர்கிறது.

நம் உடலுக்குள் ஒரு தலைமுறைக் காலம் குடியேறியிருந்து, இதை நாறவிடாமல் காப்பாற்றி வருகின்ற நம் உயிராகிய ஜீவன், இந்தக் கடத்துக்குள் இருப்பதால் கடவுள்.

உரை மனம் கடந்த ஒரு பெருவெளியில் அரசு செய்து ஓச்சும் அருட்பெருஞ் சோதியாக நம் ஆன்மா உள்ளது.

'ஆதி என்ற தீபமடா ஆத்மாவாகும்' என்கிறார் அகத்திய மாமுனிவர்.

ஆதி என்பதும், தீபம் என்பதும் என்னவென்று குரு முகமாய் தெரிந்து கொண்டால் ஆன்மா தரிசனமாகும்.

'இந்த ஆன்மாவை வேதங்களைக் கற்பதாலே, நுண்ணறிவினாலோ, விரிந்த கேள்வியறிவினாலோ, விஷய ஞானத்தாலோ, ஐம்புலன் கூர்மையினாலோ ஒருக்காலும் அறியவும் முடியாது; அடையவும் முடியாது' என்கிறது முண்டக உபநிஷதம்.

அதை அடைய நூற்றாண்டு தோறும் வாழையடி வாழையாக ஸ்ரீஇராம கிருஷ்ண பரமஹம்சர், வடலூர் வள்ளற் பெருமானார் போல் அவதரித்து வரும் அவதாரப் புருஷரைத் தேடிச் சரணடைந்து, சேவை செய்து, காத்து நின்று அவர்கள் அன்பிற்குப் பாத்திரமாகி, பின் அவர்கள் நம்மைச் சீடராக ஏற்ற பின்னர், அவர்கள் நம் மேல் வைக்கும் பெருங்கருணையினால், பேரிரக்கத்தால், நம் இருதய வீட்டில் ஆன்மாவை நாம் சந்திக்கும்படியாக செய்து வைக்கிறார்கள்.

அப்போதுதான் உரை, மனம் கடந்து நிற்கும் ஆன்மா. தத்துவமஸி (நீ அதுவாய் இருக்கிறாய்) என்பதும், அகம் பிரம்மாஸ்மி (நானே... பிரம்மம்) என்பதும் தெளிவாகும்.


| | |
|---|---|
| சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் | **திரு. ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,** ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசு நுங்கம்பாக்கம் சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13 |
| ஆசிரியர் | **கவிஞர். தென்னம்பட்டு ஏகாம்பரம், எம்.ஏ.,** |
| அச்சிடுவோர் | **சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிமிடெட்,** 130, (ப.எண் 34) நெல்சன் மாணிக்கம் சாலை, அமைந்தகரை, சென்னை – 600 029. தொலைபேசி எண்: 2374 0099 (5 இணைப்புகள்). |



# சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் விமானங்கள், தங்கத் தகடு பதிக்க ரூ. 8.07 கோடி நன்கொடை

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற 108 ஸ்ரீ வைஷ்ணவ திவ்விய தேசங்களில் ஒன்றான, வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் சுவாமி மூலவர் சன்னதி, தாயார் சன்னதி ஆகியவற்றின் விமானங்களுக்கு ரூ 20கோடி மதிப்பீட்டில் 110கிலோ தங்கத்தில் தகடுகள் பதிக்கும் திருப்பணி துவங்கப் பெற்று, தற்போது பணி நடைபெற்று வருகிறது.

சோளிங்கருக்கு அருகிலுள்ள எறும்பி எனும் ஊரைச் சொந்த ஊராகக் கொண்ட பெங்களூரு தொழிலதிபரும், திருப்பணிக்குழுவின் துணைத் தலைவருமான திரு.எம்.பூபாலன், அவர் மனைவி திருமதி பூங்கொடி, அவர் குடும்பத்தினர், நண்பர்கள் ஆகியோர் தங்கத்தகடு பதிக்கும் திருப்பணிக்கு நன்கொடையாக ரூ.5 கோடிக்கான காசோலையை, 25.05.2010 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்கள்,

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், இராணிப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், இத்திருக்கோயிலின் திருப்பணிக்குழுத் தலைவருமான திரு.ஆர்.காந்தி, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை முதன்மைச் செயலர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத், இ.ஆ.ப. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெங்களூரு தொழிலதிபர் திரு. எம்.பூபாலன், அவர் மனைவி திருமதி பூங்கொடி, அவர் குடும்பத்தினர், நண்பர்கள் ஆகியோர் மேற்படி விமானங்களுக்கு தங்கத் தகடு பதிக்கும் திருப்பணிக்கு நன்கொடையாக ரூ.3 கோடியே 7 லட்சம் தொகையை, 09.05.2010 அன்று திருக்கோயிலில் நடைபெற்ற திருப்பணி துவக்க விழாவின் போது, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், இராணிப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், திருப்பணிக்குழுத் தலைவருமான திரு.ஆர்.காந்தி ஆகியோர் முன்னிலையில் திருக்கோயிலுக்கு வழங்கியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 10.09.2010 அன்று மகாசம்ப்ரோட்சண [குடமுழுக்கு] விழா நடத்த உத்தேசித்துள்ளதால், திருப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11



# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்
## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

**அமைவிடம்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சமயபுரம் கிராமத்தில் உள்ள இத்திருத்தலம், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் திருச்சி நகரிலிருந்து 15 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

**தரிசன நேரம்:**

அதிகாலை 5.30மணி முதல் இரவு 9.00மணி வரை நடைதிறந்திருக்கும்

**பூஜை காலங்கள்**

1, காலை 6 மணி - உஷத்காலம். 2, காலை 8 மணி - காலைச்சந்தி.
3. மதியம் 12 மணி - உச்சிகாலம். 4. மாலை 6 மணி - சாயரட்சை.
5. இரவு 8 மணி - சாயரட்சை. 2ஆம் காலம். 6. இரவு 9 மணி - அர்த்தஜாமம்.

**அன்னதான திட்டம்:**

இத்திருக்கோயிலில் தினசரி 200 பக்தர்களுக்கு சுகாதாரமான முறையில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. 100 நபர்களுக்கு ரூ 1,500/ம், நிரந்தர கட்டளைக்கு ரூ. 30,000/மும் செலுத்தி கலந்து கொள்ளலாம்.

இதற்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகின்றார்கள். இத்திட்டத்திற்கு செலுத்தப்படும் நன்கொடைக்கு 80(G) 5 (vi) ன் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

**திருப்பணி**

இத்திருக்கோயிலில் தற்போது உற்சவ அம்மனுக்கு தங்க கவசம், தங்க குதிரை வாகனம், தங்ககுடம் -1ம் வெள்ளிக்குடம் -25ம் செய்யும் பணி, அமாவாசை மண்டபம், முடி மண்டபம், புதிய திருக்கோயில் அலுவலகம், பக்தர்கள் தங்கும் விடுதி, திருக்கோயில் வெளிப்பிரகாரம் விரிவுப்படுத்தும் பணி ஆகிய திருப்பணிகள் துவங்கப்படவுள்ளன.

மேற்காணும் திருப்பணிகளுக்கு பக்தர்கள் தங்களால் இயன்ற பொருள் / பண உதவிகளையோ அல்லது திருக்கோயிலில் உள்ள ரூ 100/- ரூ.500/- மற்றும் ரூ.1,000/-ற்கான திருப்பணி நன்கொடை சீட்டுக்களையோ பெற்று தங்களது காணிக்கைகளைக் கீழ்க்கண்ட முகவரியில் செலுத்தி இரசீது பெற்று, அம்மனின் திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வங்கி வரைவோலைகள், காசோலைகள், நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி
இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி,
அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் - 621 112. திருச்சி.
Office: Ph 0431 2670 460, jc(p): 2670 557. Ulthurai: 2670 970, Fax 2670557. Email: symmariamman@gmail.com

பா.பாரதி, பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

வீகேயென் கண்ணன், பி.இ.,
அறங்காவலர் குழுத்தலைவர்

அறங்காவலர்கள்

திரு. ஆ.நீலமேகம், திருமதி. கனிமொழி கருணாநிதி,பி.எஸ்.சி., பி.எட்., திரு.மு.கிள்ளிவளவன்